வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk    மலர் : 04    12.04.2023 புதன்கிழமை    இதழ் : 123    பக்கங்கள் : 16




# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் 25ஆம் திகதி பாராளுமன்றில்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ அறிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 12

**புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்வரும் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.**

புதிய பயங்கரவாத எதிர்ப்பு உத்தேச சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதற்கு நாடு முழுவதும் இருந்து எதிர்ப்புகள் வெளியாகின. இந்த நிலையில், இந்த மாத முற்பகுதியில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப் 15

# புதிய பயங்கரவாத சட்டத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை!

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 12

இலங்கையின் கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடு செய்ய முன்மொழியப் பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லையென்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான தூதுவர் டெனிஸ் சைபி இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகைகளை வழங்க வேண்டுமா இல்லையா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் எடுக்க வேண்டிய முடிவுக்கு முன்னதாகவே இந்த புதிய மாற்றுச் சட்டம் முன்வைக் கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டத்தை ஏற்காது வரிச்சலுகை ஏற்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் நீடிக்கத் தவறி 15

# மரணப் பொறியாக கல்வி மாறியுள்ளது!

## எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, ஏப். 12

இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றவாறு நாட்டின் கல்வியை நவீனப்படுத்தாத அவலத்தை- ஒரு நாடாக நாம் இன்று அனுபவித்து வருகிறோம். இது ஒரு வகையில் கல்வியின் மரணப் பொறியாக மாறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஹொரவப் பொத்தானை வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறைக்கான உபகரணங்களை நன்கொடையாக வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதன்போதே, எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் கல்வியை புதுப்பிப்பிப்பதற்கும் நவீன சூழலுக்கு ஏற்றவாறு மேம்படுத்தும் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி வகுத்துள்ளது. 15

# வெளிநாடு செல்வதற்கு முயன்ற யாழ். இளைஞர்களுக்கு மறியல்!

கொழும்பு, ஏப். 12

கப்பல் மூலம் வெளிநாடு செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த 4 இளைஞர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு காலி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த பனமா நாட்டு கப்பலில் சட்டவிரோதமான முறையில் 15

# உள்ளூராட்சி உறுப்பினர் தொகை குறைகின்றது!

கொழும்பு, ஏப். 12

புதிய எல்லை நிர்ணய அறிக்கையின்படி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 714 ஆக குறைக்கப்படுகிறது.

தேசிய எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய தேசிய குழு தமது அறிக்கையின் இரண்டாவது அலகை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் நேற்று கையளித்தது.

தற்போது 8 ஆயிரமாக உள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க இந்த அறிக்கையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# மத பிரிவு ஒன்றுக்கு எதிராக அச்சுவேலியில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 12

அரசாங்கத்துக்கு சொந்தமான நெசவு சாலை ஒன்றில் ஆராதனையில் ஈடுபட்டதுடன், அருகில் இருந்த வீட்டில் இரு பெண்களை தாக்கிய மதப் பிரிவை அங்கிருந்து வெளியேறுமாறு கூறி நேற்று சிவசேனை அமைப்பும் பொது மக்களும் இணைந்து போராட்டம் நடத்தினர்.

நேற்று காலை ஆரம்பமான இந்தப் போராட்டத்தை அடுத்து, அரச கட்டடத்தை விடுவிக்க நடவ 15

# மனநலம் பாதித்த இளைஞரால் பராமரிப்பாளர் கொடூர கொலை!

## கொடிகாமத்தில் நேற்று மாலை துயரம்!

தென்மராட்சி, ஏப். 12

மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞரால் நோயாளர் பராமரிப்பாளர் ஒருவர் கத்தியால் வெட்டியும் அலவாங்கால் குத்தியும் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை கொடிகாமத்தில் மீசாலை - புத்தூர் சந்திக்கு அண்மையாகவுள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள் 15

# ஒரு இலட்சம் செங்குரங்குகள் சீனாவுக்கு!

கொழும்பு, ஏப். 12

ஒரு இலட்சம் செங்குரங்குகள் சீனாவில் உள்ள மிருகக் காட்சி சாலைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன என விவசாய அமைச்சை மேற்கோள் காட்டி 15

# அரசாங்கத்துக்குள்ளும் எதிர்ப்பு பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு

## உடன்பட மாட்டோம் என்கிறார் அமைச்சர் அலிசப்ரி

கொழும்பு, ஏப். 12

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் ஒருசில ஏற்பாடுகளுக்கு உடன்படப் போவதில்லை. பயங்கரவாதம் என்ற சொற்பதத்துக்கு வழங்கப்பட்டுள்ள நீண்ட வரைவிலக்கணம் மட்டுப்படுத்தப்பட வேண்டும். சகல தரப்புடன் விரிவான பேச்சு நடத்தி சட்டவரைவில் திருத்தம் செய்யப்படும் என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கர வாத 15



# உள்ளூராட்சி தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

## தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 12

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் ஒத்திவைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற தேர்தல் ஆணைக்குழுவின் விசேட சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப் 15

## இப்படியும் நடக்கிறது...!

ஓர் ஏரியில் நிறைய மீன்களும் பாம்புகளும் வாழ்ந்து வந்தன. முதலில் இரண்டு இனங்களும் மிகவும் நட்பாக வாழ்ந்து வந்தன. பருவமழை பொய்த்து ஏரி வற்ற ஆரம்பித்ததும் இடத்துக்குச் சண்டை போட்டு ஏரியைப் பிரித்துக் கொண்டு வாழ்ந்தன. ஓர் இனம் வாழும் இடத்துக்கு மற்றோர் இனம் போகக்கூடாது. மீறினால் தண்டனை என்று அறிவித்துவிட்டு தத்தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வாழ்ந்துவந்தன.

இதில், ஒரு விலாங்கு மட்டும் தந்திரமாக வேஷம் போட்டு ஏரி முழுவதும் சுற்றி வந்து கொண்டிருந்தது.

பாம்புகள் இடத்துக்குப் போகும்போது விலாங்கு தன் நீண்ட உடலையும் பாம்பு போன்ற தலையையும் வைத்து தான் ஒரு பாம்பு என்று காட்டிக் கொள்ளும்.

மீன்களின் இடத்துக்குப் போகும் போது உடலைச் சுருட்டி மீன் போன்ற துடுப்புகளையும் வாலையும் காட்டி தான் ஒரு மீன் என்று காட்டிக் கொள்ளும்.

இப்படி ஏமாற்றியே பொழுதை ஓட்டிக் கொண்டு இரண்டு இடங்களிலும் உணவு பெற்று ஏரி முழுவதும் சுற்றித் திரிந்து வந்தது விலாங்கு.

வெயில் காலம் அதிகமானது. ஏரி மேலும் வற்றியது. பாம்புக் கூட்டமும் மீன் கூட்டமும் தங்கள் இடங்களை நெருக்கியும் குறுக்கியும் அமைத்துக் கொண்டே வந்தன.

ஒரு நாள் இரண்டு கூட்டங்களும் ஒன்றின் இருப்பிடத்தை இன்னொன்று பார்த்துக் கொள்ளும் தூரத்தில் அமைக்கும் நிலை வந்தது.

அப்போது மீனாக விலாங்கு வேஷம் போட்டால் பாம்புகள் பார்த்து தாக்கின. பாம்பாக வேஷம் போட்டால் மீன்கள் கடித்துக் குதறின.

"நான் பாம்பும் அல்ல மீனும் அல்ல", என்று விலாங்கு கதறியது. நம்புவாரில்லை. விலாங்கு, "முதலிலேயே உண்மையைச் சொல்லியிருக்கலாமோ", என்று நினைத்துக் கொண்டு செத்தே போனது.

சில செய்திகளைப் படித்த போது இந்தக் கதைதான் ஞாபகத்துக்கு வந்தது.

பயங்கரவாத தடைச் சட்டம் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்த நாட்டில் அமுலில் இருந்த போது யாரும் அது குறித்து அலட்டிக்கொள்ளவில்லை. சில சர்வதேச நிறுவனங்களும் நாடுகளும்தான் அந்த கொடிய சட்டத்துக்கு எதிராக அவ்வப்போது குரல் கொடுத்து வந்தன.

இலங்கைக்கு கிடைத்து வரும் ஜி. எஸ். பி. பிளஸ் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நீடிப்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று நிபந்தனை விதித்த பின்னர், அதனை நீக்கியே ஆக வேண்டும் என்ற நிலைமை இலங்கைக்கு வந்த பின்னர்தான், அதனை நீக்கி புதிய சட்டத்தை கொண்டுவர இலங்கை முன்வந்தது.

இந்த நேரம் பார்த்து அந்த சட்டத்தை நீக்கவேண்டும் என்று தமிழரசுக் கட்சியும் ஊர்வலம் போனது. ஆனால், இருக்கும் சட்டத்தை நீக்கி விட்டு புதிய சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முன்வந்ததும் - பின்னர் இப்போது அதற்காக புதிய சட்டத்தை தயாரித்து வெளியிட்டிருப்பதும் வாசகர்கள் அறிந்ததுதான்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பழைய சட்டத்தைக் கொண்டு வந்தபோது தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அவர்களின் போராட்டத்தை அடக்குவதற்காகவே- அதாவது தமிழ் இளைஞர்களை இலக்கு வைத்தே அந்தச் சட்டத்தை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்தார். அதனால் தமிழ் இளைஞர்கள்பட்ட துன்பங்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை.

இப்போது ஜே. ஆரின் மருகர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி. அவர் இப்போது எதிர்கொள்வது எத்தகைய நெருக்கடி என்பது தெரிந்ததுதான். அதனால்தானோ என்னவோ அவர் தான் எதிர்கொள்ளும் நெருக்கடியை தணிக்க இந்த புதிய சட்டத்தைத் தயாரித்திருக்கிறார்.

இந்தச் சட்டம் யாரை இலக்கு வைத்து தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பது இரகசியமானதல்ல. மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டத்தைத் தமிழ் இளைஞர்கள் ஆரம்பிக்கப் போவதில்லை என்பது ரணிலுக்கு நன்கு தெரிந்ததுதான். ஆனால், மீண்டும் 'அரகலய' வராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அதனால்தானோ என்னவோ ரணில் தனது புதிய சட்டத்தில் அவற்றையெல்லாம் அடக்குவதற்கு யோசிக்கின்றார்.

அந்த சட்டம் அனைவருக்குமே ஆபத்தானதுதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதனை என்ன விலை கொடுத்தும் தடுக்கவேண்டும் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது.

ஆனால், நாம் இங்கு சொல்ல வருவது.

ஒருவர் தனது இனத்தை மறைக்க பொய் சொல்லிக் கொண்டிருக்கிறார். உதாரணமாக தான் ஒரு தமிழர் என்று சொல்வதை தவிர்த்து வருகிறார் என்றால், அவரின் பாதத்தை திடீரென்று நமது சப்பாத்துக் காலால் மிதித்தால் அவர் 'அம்மா...' என்று கத்துவார்.

அதுபோலத்தான், இப்போது வடக்கில் தமிழ்த் தேசியம் பேசுகின்ற பலரும் தெற்கில் தங்களை சிறீ லங்கா தேசியவாதிகளாகக் காட்டி வருவருவதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள்.

இப்போது இந்த புதிய சட்டம் இலங்கையில் குறிப்பாக தெற்கில் சிங்கள மக்களை பாதிக்கும் வகையில் இருப்பதாக நமது தமிழ்த் தேசியவாதிகள் பலரும் குரல்கொடுத்து வருகின்றனர்.

தெற்கில் சிங்கள மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றால் அதைப் பார்த்து சந்தோசப்பட்ட தமிழ்த் தேசியவாதிகள் இப்போது, ஐயோ சிங்கள இளைஞர்கள் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படப் போகிறார்கள் என்று கவலைகொள்கின்றார்கள்.!

இதனைப் படிக்கின்றபோது மேலேயுள்ள விலாங்கு மீன் ஞாபகத்துக்கு வந்துபோவதைத் தவிர்க்க முடியவல்லை.

**- ஊர்க்குருவி**

# ஐ. எம். எவ். கடன் திட்டம் குறித்து ஏப்ரல் 25 பாராளுமன்றில் விவாதம்!

கொழும்பு, ஏப். 12

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அது எதிர்வரும் 25ஆம் திகதி முதல் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் தமது நாட்டுக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்று தீர்மானிப்பதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே சாகல ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இராஜதந்திர பிரதானிகளுடனான இக்கலந்துரையாடலில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான கட்டமைப்பு ரீதியிலான சீர்திருத்த வேலைத் திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டம் நிதி மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மட்டுப்படுத்தப்படாமல், இலங்கையின் மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு முக்கியமான நல்லிணக்க செயல்முறை போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# புத்தகப் பைகள், காலணிகளின் விலையை குறைக்க நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 12

பாடசாலை புத்தகப் பைகள், காலணிகளின் விலையை உடனடியாக குறைக்க நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

புதிய பாடசாலை தவணை ஆரம்பமாகியுள்ள நிலையில், பிள்ளைகளுக்கு காலணிகள் மற்றும் பைகளை கொள்வனவு செய்வதில் பெற்றோர்கள் சிரமப்படுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

பாடசாலைப் பைகள், காலணிகளின் விலைகள் தொடர்பில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தற்போது காலணி மற்றும் பைகள் இறக்குமதி முற்றாக நிறுத்தப்பட்டு உள்ளூர் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்படுகின்றன. டொலரின் பெறுமதி வீழ்ச்சிக்கு ஏற்ப உள்ளூர் சந்தையில் பாடசாலை பைகள் மற்றும் காலணிகளின் விலை குறைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் ஆராய்ந்து ஒரு வாரத்துக்குள் அறிக்கை வழங்குமாறு வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்துக்கும் அமைச்சர் உத்தரவிட்டார்.

விலை குறையவில்லை என்றால் உடனடியாக ஜனாதிபதிக்கு அறிவித்து விலையை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நாட்டை வழிநடத்துவதற்கு பஸில் பொருத்தமானவர்!

### சாகர காரியவசம் எம். பி.


கொழும்பு, ஏப். 12

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டை வழிநடத்த மிகவும் பொருத்தமானவராக இருப்பார் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.



யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் பஸில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இந்நாட்டின் வறிய மக்களை முன்னேற்றுவதற்கும், உலகின் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றுவதற்கும் செயல்பட்டு வந்தவர். அத்துடன், நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சர்வதேச சமூகத்துடன் சிறப்பான விதத்தில் செயற்பட்டு யுத்தத்தத்துக்கு தேவையான ஆதரவைப் பெற்றவர்.

நாட்டிலுள்ள ஏழை மக்களின் கஷ்டங்களை புரிந்து கொண்டு, அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான பல நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய தலைவர் பஸில் எனவும், கடந்த காலங்களில் அவர்மீது போலியான குற்றச் சாட்டுகள் முன்வைக்கப் பட்டன என்றும் சாகர தெரிவித்தார். (ஐ)



நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் மஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றபோது...!

ஈழநாடு
Eelanadu
12.04.2023 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஏன் இந்த அச்சம்?

இலங்கையில் படைத்தளத்தை நிறுவும் எந்தவோர் எண்ணமும் அமெரிக்காவுக்கு இல்லையென்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்திருக்கின்றார். இன்னும் எத்தனை முறைதான் அமெரிக்கத் தூதுரகம் இதனை கூற வேண்டியிருக்கும்? அண்மையில், அமெரிக்க உளவுத் துறையின் தலைவர் வில்லியம் வேன்ஸ் கொழும்புக்குள் பிரவேசித்தார் எனவும் இராணுவ தலைமையகத்தின் அதிகாரிகள் நிராயுதபாணிகளாக்கப்பட்டனர் என்றும் ஒரு செய்தியை விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில போன்றவர்கள் தொடர்ந்து கூறிவந்தனர். ஆனால், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அதனை மறுத்திருந்தார்.

அமெரிக்கா திருகோணமலையில் ஒரு படைத்தளத்தை நிறுவப் போவதாக சிங்கள அரசியல்வாதிகள் சிலர் அவ்வப்போது கூறுவதுண்டு. குறிப்பாக தங்களை இடதுசாரிகளாக அடையாளப்படுத்துபவர்களும் தீவிர தேசியவாதிகளாக அடையாளம் காண்பிப்பவர்களுமே இவ்வாறான கதையை திரும்பத் திரும்ப கூறிவருகின்றனர். உதாரணமாக திஸ்ஸ விதாரண போன்றவர்கள். ஒருவேளை அவர்கள் இப்போதும் முன்னைய பனிப்போர் கால சிந்தனையிலிருந்து வெளியில் வரமுடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கலாம்!

பனிப்போர் காலத்தில் திருகோணமலைமீது அமெரிக்கா கண்வைத்திருப்பதான ஒரு நம்பிக்கை நிலவியது. குறிப்பாக அன்றைய சூழலில், சோவியத் முகாமுடன் ஒன்றிணைந்திருந்த இந்தியாவிடம் அவ்வாறான கவலைகள் இருந்தன. அன்றைய ஆட்சியாளரான ஜே. ஆர். ஜெயவர்த்தன திருகோணமலையை அமெரிக்க கடற்படையின் பயன்பாட்டுக்கு வழங்க முயற்சிப்பதான ஒரு சந்தேகம் இருந்தது. ஜே. ஆரின் செயல்பாடுகளும் சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வகையிலேயே அமைந்திருந்தன. அப்போது, இந்தியாவின் உளவுத் துறையின் தலைவராக இருந்த ஆர். என். காவோ இதனை நேரடியாகத் தெரிவித்தார் என்றும்கூட சிலர் எழுதியிருக்கின்றனர். இதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியாவிட்டாலும்கூட, ஜே. ஆரின் மேற்கு சார்பான கொள்கையை இந்திரா காந்தி சகித்துக் கொள்ளவில்லை. இந்தியா அன்றைய சூழலில், இலங்கை விடயத்தில் நேரடியாகத் தலையீடு செய்ய முற்பட்டமைக்கு பின்னாலிருந்த காரணம் இதுதான். ஜே. ஆர். இந்தியாவின் கரிசனைகளை புறம்தள்ளி செயல்படாதிருந்திருந்தால் இந்தியாவின் இராணுவ தலையீடும் நிகழாமல் போயிருக்கலாம்.

ஆனால், இன்றுள்ள நிலைமை முற்றிலும் வேறானது. பனிப்போர் கால அமெரிக்காவும் இல்லை - அன்றிருந்த இந்தியாவும் இப்போதில்லை. இப்போது, இந்தியாவும் அமெரிக்காவும் குவாட் நாடுகள் - மூலோபாய பங்காளிகள். சில விடயங்களில் மாறுபட்ட அணுகுமுறைகள் இருந்தாலும்கூட அடிப்படையான மூலோபாய விடயங்களில் அமெரிக்காவும் இந்தியாவும் ஒரே முகாமில்தான் இருக்கின்றன. இவ்வாறாதொரு பின்புலத்தில் திருகோணமலையில் ஒரு படைத்தளத்தை நிறுவ வேண்டிய எந்தவொரு மூலோபாய தேவையும் அமெரிக்காவுக்கு இல்லை. ஒருவேளை அவ்வாறானதொரு தேவையை தவிர்க்க முடியாதென்றால் நிச்சயம் அமெரிக்காவும் இந்தியாவும் பரஸ்பர இணக்கத்தின் அடிப்படையில்தான் சில நகர்வுகளை மேற்கொள்வர். இந்தியாவை புறம்தள்ளி - இந்தியாவுக்குத் தெரியாமல் அவ்வாறானதொரு தளத்தை அமெரிக்காவால் நிறுவ முடியாது.

சிங்கள அரசியல்வாதிகள் தங்களின் உள்ளூர் அரசியலுக்காக இவ்வாறான பரபரப்புகளை ஏற்படுத்துகின்றார்கள் என்றால், தமிழ் புத்திஜீவிகள் என்போரும் விடயங்களை ஆழமாக நோக்காமல் சிங்கள அரசியல்வாதிகளின் கதைகளை பாடமாக்கி சிந்திக்க முற்படுகின்றனர். சிங்களவர்கள் ஒருவேளை அமெரிக்க படைத்தளம் வந்துவிட்டால் தங்களின் ஆதிபத்தியம் இல்லாமல் போய்விடுமென்று அஞ்சக்கூடும். தமிழர்கள் இந்த விடயத்தைப் பார்த்து ஏன் அச்சப்பட வேண்டும்? ஒருவேளை - அமெரிக்கா உண்மையிலேயே படைத்தளமொன்றை நிறுவ முயற்சிக்கின்றதென்றால் அதனை எவரால் தடுக்க முடியும்? இவ்வாறான விடயங்கள் மிகவும் உயர்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துவிடும். எனவே, இவ்வாறான விடயங்களில் தமிழர்கள் தங்களின் நேரத்தை விரயம் செய்ய வேண்டியதில்லை. இலங்கைத் தீவில் நடைபெறக்கூடிய எதனையும் எவராலும் தடுக்க முடியாது. அந்தக் கட்டத்தை இலங்கை தாண்டிவிட்டது. எனவே, பல்வேறு வடிவங்களில் வெளித் தலையீடுகள் இடம்பெறத்தான் போகின்றன. அதனை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாமென்றுதான் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

# மாற்றுத் திறனாளிகளுக்கான இசை போட்டி யாழ்ப்பாணத்தில்

*யாழ்ப்பாணம், ஏப். 12*

*வடக்கு மாகாண மாற்றுத் திறனா ளிகளின்இசை திறமையை வெளிக் கொண்டுவரும் முகமாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் இசை போட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.*

*சாவிகா சங்கீத அறிவாலயத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.*

*இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாற்றுத்திறனாளிகள் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையான காலப்பகுதியில் போட்டி நடைபெறும் மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.*

*போட்டியாளர்கள் தனிப் பாடல், தனிவாத்திய இசைக்கே அனுமதிக்கப்படுவர். போட்டியாளர்கள் தமக்கு விருப்பமான ஏதாவது ஒரு பாடலை (கர்நாடக சங்கீதம்ஃ திரையிசைஃ மேலைத் தேயம்) 6 நிமிடங்களுக்குள் பாட - இசைக்க முடியும்.*

*வாத்தியம் இசைப்போர் குறித்த குறித்த வாத்தியக்கருவியை கொண்டு வருதல் வேண்டும். போட்டி நிறைவுறும் வரை பாதுகாவலர் போட்டியாளருடன் இருக்க வேண்டும்.*

*இதில் சகல மாற்றுத் திறனாளிகளும் வயது வேறுபாடின்றி பங்கேற்க முடியும் என்று நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)*

# வீதியை மறித்து ரயில் பாதை; பணியை தடுத்தனர் மக்கள்!

*வவுனியா, ஏப். 12*

*கிராமத்துக்கு செல்லும் பாதையை மறித்து அநுராதபுரம் - வவுனியா புகையிரத பாதை அமைக்கும் நடவடிக்கைக்கு விஜயபாகுகம மக்கள் எதிர்ப்பு தெரிவித்து திருத்த வேலைகளை தடுத்து நிறுத்தியுள்ளனர்.*

*நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,*



*வவுனியா - ஈரப்பெரிய குளம், விஜயபாகு கம கிராமத்தில் 50 வரையிலான குடும்பங்கள் வசிக்கின்றன. இந்தக் கிராம மக்கள் கடந்த 32 வருடங்களாக பயன்படுத்தி வந்த வீதியை மறித்து புகையிரதப் பாதை நிர்மாணம் நடைபெற்று வருகின்றது.*

*பாதைய மறித்த புகையிரத திணைக்களத்தினர் 4 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாதைய பயன்படுத்துமாறு கூறியுள்ளனர்.*

*இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே மக்கள் புகையிரதப் பாதை அமைக்கும் பணியை தடுத்து நிறுத்தியுள்ளனர்.*

*இவ்விடயத்தில் பொலிஸார் தலையிட்டதைத் தொடர்ந்து உயர்மட்ட அதிகாரிகளுடன் நேற்று பேச்சு நடை பெற்றபோதும் தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை.*

*இந்நிலையில், தமக்கான தீர்வு கிடைக்காவிடின் தாம் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அந்தக் கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். (ஐ)*

## பெரியபுராணம் சொற்பொழிவு

*கொழும்பு, ஏப். 12*

*சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் அனுசரணையில் வாராந்தம் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.*

*சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடக்கும் சொற்பொழிவு தொடர் - 01 சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலய மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.*

*சேக்கிழார் பெருமானின் குருபூசையை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச. நவநீதன் ‘வாளால் மகவரிந்தூட்ட வல்லே வள்ளல்’ என்னும் தலைப்பில் ஆற்றுவார்.*

*சொற்பொழிவின் நிறைவில் கேள்விகள் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)*


## மின்வேலியில் சிக்கி இளைஞர் உயிரிழப்பு

*வவுனியா, ஏப். 12*

*யானைக்கு அமைத்த மின் வேலியில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.*

*வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கனராயன்குளம், குறிசுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த உலகநாதன் கஜந்தன் (22 வயது) என்பவரே உயிரிழந்தார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் பலமுறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுவீர்கள்.

**இடபம்**
கடினமான காரியங்களை எல்லாம் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்த்தவை சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை கிடைக்கும். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**கன்னி**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது.வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**தனுசு**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். நிர்வாகத் திறமைகள் வெளிப்படும். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**கும்பம்**
உங்கள் பேச்சில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். கடையை புது இடத்திற்கு மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மீனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறி வேலைகள் முடியும். வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

# நீண்ட இழுபறிக்கு பின்னர் ஒன்லைன் ரம்மிக்கு தடை!

## ஆளுநர் அனுமதி அளித்தார்

*சென்னை, ஏப். 12*

ஒன்லைன் ரம்மி விளையாட்டு தடை சட்டப் பிரேரணைக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார். இந்த சட்டம் நேற்றைய தினமே அரசிதழிலும் (வர்த்தமானி) வெளியிடப்பட்டது.

இது தொடர்பாக சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் நேற்று முன்தினம் பேசுகையில், "நாம் நிறைவேற்றி அனுப்பிய அரசினர் தனித் தீர்மானத் தில், ஒன்லைன் ரம்மி விளையாட்டு தடைச் சட்டம் குறித்த பிரேரணை உள்ளிட்ட பல்வேறு பிரேர ணைகள் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக் கப்பட்டு, நிலுவையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி, இதனால் தமிழ்நாட்டின் நிருவாக நலனும், இளைஞர்களின் எதிர்காலமும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தோம்.

'பொது வெளியில் ஆளுநர் தெரிவித்து வரும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் குறித்தும் நாம் இங்கு குறிப்பிட்டிருந்தோம். இந்தச் சூழ்நிலையில், இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் ஒரு நல்விளைவாக, ஆளுநர், ஒன்லைன் ரம்மி விளையாட்டு தொடர்பான பிரேரணைக்கு ஒப்புதல் அளித்துள்ளார். இந்தச் சட்டமானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் பேரவைத் தலைவர் மூலமாக இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன்" - என்றார்.

முன்னதாக, ஒன்லைன் ரம்மி தடை சட்டப் பிரேரணை கடந்த ஆண்டு ஒக்ரோபரில் அவசர சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இந்தப் பிரேரணைக்கு இவ்வளவு காலமும் ஆளுநர் ஒப்புதல் அளிக்காததால் அது சட்டமாக நிறைவேற்றப்படவில்லை. இதனிடையே ஒன்லைன் ரம்மி விளையாட்டால் 45 பேர் தற்கொலை செய்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

*தி. மு. க. தலைமையிலான கூட்டணி:*

# தமிழக ஆளுநரை கண்டித்து இன்று கண்டன பொதுக்கூட்டம்!

*சென்னை, ஏப். 12*

தமிழக ஆளுநரை கண்டித்து சென்னையில் இன்று புதன்கிழமை கண்டன பொதுக்கூட்டம் நடத்தப்படும் என மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது.

தி. மு. க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஆளுநருக்கு எதிராக தமிழக முதல்வர் கொண்டு வந்த, தனித் தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், தமிழக ஆளுநர் ஒன்லைன் மீதான தடைச் சட்டத்துக்கு ஒப்புதல் வழங்கி உள்ளார். இது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளுக்கு கிடைத்த முதல் வெற்றி.

ஆனாலும், தமிழக ஆளுநரால் கிடப்பில் போடப்பட்டுள்ள மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கப்படாததாலும், ஸ்டெர்லைட் பிரச்னை குறித்தும் மற்றும் சனாதன ஆதரவு பேச்சுகள் குறித்தும் எந்தவித வருத்தமும், விளக்கமும் அளிக்காத காரணத்தாலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் ஏப்ரல் 12 (இன்று) ஆளுநர் மாளிகை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற இருந்தது.

இந்நிலையில், இதேநாளில் ஆர்ப்பாட்டத்துக்கு பதிலாக, சைதாப்பேட்டை தேரடித் திடலில் மாபெரும் கண்டன பொதுக் கூட்டம் நடைபெறும் - என்றுள்ளது. (ஐ)

---

# "சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை தமிழ்நாடு தடை செய்ய வேண்டும்"

*சென்னை, ஏப். 12*

தமிழர்களே இல்லாத சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை தடை செய்ய வேண்டும் என்று சட்டசபையில் பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டசபையில் பேசிய வெங்கடேஸ்வரன் பேசுகையில், "தமிழகத்தில் திறமையான வீரர்கள் இருந்தும் ஒருவரைக்கூட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தெரிவு செய்யவில்லை. தமிழர்களே இல்லாமல் தமிழக அணி என்பது போல விளம்பரம் செய்து நம் மக்களிடம் இலாபம் அடைகின்றனர். எனவே, தமிழர்கள் இல்லாத சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை தடை செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு வீரர்கள் இடம்பெறாத சென்னை அணி விளையாட தமிழ்நாடு அரசு தடை விதிக்க வேண்டும்", என்றும் கோரினார். (ஐ)

---

# மீன்பிடி தடைக்காலம் சனிக்கிழமை ஆரம்பம்!

*சென்னை, ஏப். 12*

மீன்பிடி தடைக்காலம் வரும் சனிக்கிழமை தொடங்குகிறது. இந்த நிலையில், நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலில் மீன்களின் இனப் பெருக்கத்தை அதிகரிக்கும் வகையில் தமிழகத்தில் ஆண்டு தோறும் ஆழ்கடலில் மீன் பிடிக்க 61 நாட்கள் தடை விதிக்கப்படுவது வழக்கம். இதன்படி, இந்த ஆண்டுக்கான மீன்பிடி தடைக்காலம் வரும் 15ஆம் திகதி தொடங்கி ஜூன் 14ஆம் திகதி வரை 61 நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

அதுவரை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட 14 கடற்கரை மாவட்டங்களைச் சேர்ந்த 15 ஆயிரம் விசைப் படகுகள் கடலுக்குச் செல்லாமல் மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன்பிடி இறங்குதளங்களில் நங்கூரமிடப்பட்டு இருக்கும்.

எந்த விசைப் படகுகளும் ஆழ்கடலுக்குள் மீன்பிடிக்க செல்லாது. இந்த தடை காலத்தில் மீனவர்கள் தங்கள் படகுகள், மீன் பிடி உபகரணங்களை சீரமைக்கும் பணியில் ஈடுபடுவார்கள். இதற்கிடையே, மீன்பிடித் தடைக்கால நிவாரண நிதியை உயர்த்தி வழங்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# இலங்கையில் இராணுவ தளம் அமைக்கும் நோக்கம் இல்லை!

## அமெரிக்கத் தூதுவர் உறுதி

கொழும்பு, ஏப். 12

**இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கும் நோக்கம் தமது நாட்டுக்கு இல்லை என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியின் இலங்கை விஜயம் குறித்த கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மை பிரதி பாதுகாப்புச் செயலாளர் ஜெடிடியா றோயல் தலைமையிலான அமெரிக்க உயர்மட்ட பாதுகாப்புக் குழு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வந்திருந்தது.

உயர்மட்ட அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகளை உள்ளடக்கிய குறித்த குழு, அமெரிக்க விமானப்படையின் இரண்டு சிறப்பு விமானங்களில் நாட்டை வந்தடைந்தது.

பிராந்திய பாதுகாப்பு, இலங்கை இராணுவத்தில் சீர்திருத்தங்கள், கடல்சார் கள விழிப்புணர்வு நடவடிக்கை தொடர்பான விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இக்குழு இலங்கைக்கு வந்திருந்தது.

இந்த விஜயம் இலங்கையில் ஓர் இராணுவத் தளத்தை அமைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்ற ஊகத்தை தூண்டியது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்த அமெரிக்கத் தூதுவர்



ஜூலி சுங், இலங்கையில் இராணுவத்தளத்தை அமைக்கும் நோக்கம் தமது நாட்டுக்கு இல்லை என கூறினார்.

அத்துடன், சோபா ஒப்பந்தத்தை புதுப்பிக்கவோ அல்லது மீள் மதிப்பீடு செய்யவோ அமெரிக்கா எந்த முடிவும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# பாடசாலை விடுமுறை காலத்தில் திருத்தம்!

## கல்வி அமைச்சு ஆலோசனை

கொழும்பு, ஏப். 12

2022 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டதை அடுத்து, பாடசாலை விடுமுறை காலத்தை திருத்துவதற்கு கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகும் பாடசாலை தவணை மே 29 ஆம் திகதி வரை தொடரும்.

இந்தநிலையில், புதிய பாடசாலை நேர அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மே 29 ஆம் திகதி ஆரம்பமாகும் 2022 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை ஜூன் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2022 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# வீதியை விட்டு விலகி விபத்தில் சிக்கிய பௌசர்



கொழும்பு, ஏப். 12

தெற்கு அதிவேக வீதியின் பத்தேகம நுழைவாயிலுக்கு அருகில் நேற்று அதிகாலை பௌசரொன்று வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து காலி நோக்கி சீமெந்து தூள் ஏற்றிச் சென்ற பௌசரொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்த சாரதி மற்றும் சாரதியின் உதவியாளரும் பத்தேகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக கராப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பல இலட்சம் ரூபாய் செலவில் புத்தாண்டை கொண்டாடும் 1,704 சமுர்த்தி வங்கிகள்!

கொழும்பு, ஏப். 12

நாடளாவிய ரீதியாக உள்ள 1,704 சமுர்த்தி வங்கிகளும் திட்டமிட்ட வகையில் புத்தாண்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சமுர்த்தி நிதியத்தின் 805 லட்சம் ரூபா நிதியைப் பயன்படுத்தி குறித்த நிகழ்வுகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

எனினும் முன்னதாக இதற்கு சமுர்த்தி தொழிற்சங்க ஒன்றியம் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த, அந்த ஒன்றியத்தின் தலைவர் சுஜீவ விக்ரமசிங்க, பொருளாதார நெருக்கடி நிலையில் அந்தளவான தொகையை செலவிடுவதற்கு எதிர்ப்பை வெளியிடுவதாக தெரிவித்திருந்தார்.

அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதி சமுர்த்தி வங்கிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சமுர்த்தி தொழிற்சங்கங்கள் குறிப்பிட்டிருந்தன.

எவ்வாறாயினும் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி, சமுர்த்தி வங்கிகளுக்கான நிதி, மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியின் ஊடாகவே கிடைப்பதாக சுட்டிக்காட்டினார்.

அன்றைய தினம் குறித்த இரண்டு வங்கிகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, அன்றைய தினம் சூழ்நிலைக்கு ஏற்ப வங்கி செயல்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்தார்.

# இறக்குமதி முட்டைகளுக்கு கால்நடை உற்பத்தி திணைக்களம் அனுமதி

கொழும்பு, ஏப். 12

இந்தியாவிலிருந்து இரண்டாவது கட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளுக்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகள் இலங்கை சுங்கத்தினூடாக பல்நோக்கு வணிக கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகளின் மாதிரிகள் தற்போது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி ஹேமாலி கொத்தலாவல குறிப்பிட்டார்.

பயன்பாட்டுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள 10 இலட்சம் முட்டைகள் பண்டிகைக்கால பயன்பாட்டுக்காக பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக பல்நோக்கு வணிக கூட்டுத்தாபனம் கூறியுள்ளது.

இதற்கு முன்னர் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 இலட்சம் முட்டைகளை ஹோட்டல்கள் மற்றும் பேக்கரிகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளதாக பல்நோக்கு வணிக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார். (அ)

# அரச நிறுவன பிரதானிகளை சந்திக்கவுள்ளார் ஜனாதிபதி!

கொழும்பு, ஏப். 12

சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்படி அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகாரிகள் மற்றும் ஆணைக்குழுக்களின் தலைவர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோரைச் சந்திக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நுவரெலியா நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் கலந்துரையாடும் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியாது என பலர் நினைத்தாலும், சர்வதேச நாணய நிதியமும் அரசாங்கமும் செய்துகொண்ட உடன்பாட்டின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தின் மீது புதிய நம்பிக்கையை ஏற்படுத்த அனைவருக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

2025ஆம் ஆண்டளவின் நாட்டின் அபிவிருத்தித் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பையும் பெறுவதே தமது எதிர்பார்ப்பு எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# 6 வயது குழந்தையின் கால் எலும்பு உடைவு!

## யாழில் தந்தை அடித்தமையால்

யாழ்ப்பாணம், ஏப். 12

தந்தை அடித்ததால் 6 வயது குழந்தையின் கால் எலும்பு முறிந்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நடந்துள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பெலி பகுதியில் நேற்று முன் தினம் மாலை இந்த சம்பவம் நடந்தது.

தந்தை அடித்ததால் 6 வயது குழந்தையின் தொடை எலும்பு முறிந்துள்ளது. குழந்தை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. (அ)

# முன்னாள் சட்டமா அதிபரின் அலுவலகத்தில் கோப்பு திருட்டு

கொழும்பு, ஏப். 12

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவின் அலுவலகத்திலிருந்து கோப்பு ஒன்று இனந்தெரியாத ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் டி.என்.எல்.இலங்கசிங்கவிடம் அறிவித்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி இரவு, அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வெள்ளை வானில் கொழும்பு 7, லாங்டன் பிளேஸில் உள்ள முன்னாள் சட்டமா அதிபரின் அலுவலகத்திற்குள் நுழைந்து, அலுவலகத்தில் உள்ள அனைத்து கோப்புகளையும் சோதித்த பின்னர் ஒரு கோப்பை எடுத்துச் சென்றாரென ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது. (அ)

# மே 18 நினைவேந்தலை இம்முறை ஒட்டாவாவில் அனுஷ்டிக்க திட்டம்

ஒட்டாவா, ஏப். 12

**கனடாவில் உள்ள ஒட்டாவா தமிழ் சங்கம், தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தை எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதியன்று ஒட்டாவாவில் அனுஷ்டிக்க திட்டமிட்டுள்ளது.**

அன்றைய தினத்தில் பல தமிழ் அமைப்புகள் நிகழ்வில் கலந்து கொண்டு கூட்டறிக்கையை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக கடந்த ஆண்டு மே 18ஆம் திகதியன்று, கனேடிய பாராளுமன்றம் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலையை அங்கீகரித்து, ஒவ்வொரு ஆண்டும் மே 18ஆம் திகதியை தமிழ் இனப்படு கொலை நினைவு தினமாக நிறுவியது.

இந்தநிலையில் ஒட்டாவா தமிழ் சங்கம், தமிழ் இனப்படு கொலை நினைவு தினத்தை இந்த முறை எதிர்வரும் மே 18 ஆம் திகதி இரவு 7 மணியளவில் வோல்டர் பேக்கர் விளையாட்டு மையத்தில் அனுஷ்டிக்க திட்டமிட்டுள்ளது.

தமிழர் எழுச்சியின் அடையாளமாக தீபம் ஏற்றும் நிகழ்வு இடம்பெறும்.

அத்துடன் 2009ஆம் ஆண்டு போரின் இறுதி நாட்களில், இந்த தமிழர்களுக்கு கிடைத்த ஒரே உணவு, ஒரு சிட்டிகை உப்பு நீரில் சமைத்த ஒரு பிடி அரிசி மட்டுமே என்ற அடிப்படையில், தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு தருணத்தைக் குறிக்கும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ் இனப்படுகொலையை பரந்த அளவில் அங்கீகரிப்பதற்காக கனடா சரியான நடவடிக்கைகளைப் பின்பற்றவும், ஈழத் தமிழ் சமூகத்திற்கு நீதி வழங்க இலங்கை அரசாங்கத்தையும் அதன் அதிகாரிகளையும் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டுவருவதில் தீவிரப் பங்காற்றுமாறும் சர்வதேச சமூகத்தை வலியுறுத்துவதாக ஒட்டாவா தமிழ்ச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# பால்மாவின் விலை குறைவடையக்கூடும்

கொழும்பு, ஏப். 12

பால்மாவின் விலை எதிர்வரும் மாதங்களில் மேலும் குறைவடையக்கூடும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் பால்மாக்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால்மா பொதி ஒன்றின் விலை 80 ரூபாவால் குறைக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால்மா பொதி ஒன்று ஆயிரத்து 120 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் மூவாயிரத்து 100 ரூபாவாக நிலவிய ஒரு கிலோகிராம் பால்மா பொதியின் விலை 200 ரூபாவால் குறைக்கப்பட்டு 2 ஆயிரத்து 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும், எதிர்வரும் ஜூன் மாதமளவில் மேலும் பால்மா பொதிகளின் விலை குறைவடையக்கூடும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் அங்கத்தவர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நீதி கிட்டவில்லை; போராட்டத்துக்கு அழைக்கிறது எதிர்க்கட்சி

கொழும்பு, ஏப். 12

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று 4 ஆண்டுகள் நிறைவடையவுள்ள போதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படாமைக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையில், 5 பகுதிகளிலிருந்து பேரணியை ஆரம்பித்து, கொழும்பில் அதனை நிறைவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

நாட்டில் ஜனநாயகத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஜனநாயகவாதிகளாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும். இதற்கு அனைத்து கட்சிகளும் ஒரே மேடையில் கைகோர்க்க வேண்டும்.



கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஆட்சி மாற்றத்துக்கு வழி வகுத்தன. இனங்களுக்கிடையில் பிரச்னைகள் ஏற்பட காரணமாக அமைந்தன.

இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கோரியும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் எதிர்வரும் 19ஆம் திகதி நாட்டின் 5 பகுதிகளிலிருந்து பேரணியை ஆரம்பித்து, 21ஆம் திகதி கொழும்பில் அதனை நிறைவு செய்யவுள்ளோம்.

இதற்கு சகல தரப்பினரிடமிருந்தும் ஒத்துழைப்பைக் கோருகின்றோம். அரசாங்கத்துக்குள் பாரிய பிரச்னைகள் காணப்படுகின்றன. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பிலும் பாரிய முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறு அரசாங்கத்துக்குள் காணப்படும் முரண்பாடுகளை மறைப்பதற்காக எதிர்க்கட்சிக்குள் பிளவுகள் காணப்படுவதாக காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் இணையவுள்ளதாக கூறப்பட்ட போதிலும், இதுவரையிலும் அவ்வாறு எவரும் இணையவில்லை. இது தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டுக்கு முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தொடர்பில் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (அ)

# நாட்டில் தீவிரமடைகிறது இன்புளுவன்சா காய்ச்சல்!

கொழும்பு, ஏப். 12

இன்புளுவன்சா காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், பொதுமக்கள் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார மேம்பாட்டுப் பணியகம் எச்சரித்துள்ளது.

இந்த நோய் சுவாச மண்டலத்தைத் தாக்குகிறது. எனவே கர்ப்பிணித் தாய்மார்கள், இளம் குழந்தைகள் மற்றும் முதியவர்களை அதிகம் பாதிப்பதாகவும் சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

வைரஸால் பாதிக்கப்பட்ட ஆரோக்கியமான நபர் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகு இயற்கையாகவே குணமடைவார் என்று பணியகம் தெரிவித்துள்ளது.

அதிக காய்ச்சல், தசை மற்றும் மூட்டு வலி, மூக்கு ஒழுகுதல், தொண்டைப் புண் மற்றும் சளி ஆகியவை நோயின் முக்கிய அறிகுறிகளாகும்.

மேலும், பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் வெளியில் செல்லும்போது அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். (அ)

# எல்லை நிர்ணய குழு அறிக்கையின் 2ஆம் பாகம் பிரதமரிடம் கையளிப்பு

கொழும்பு, ஏப்.12

தேசிய எல்லை நிர்ணய குழு அறிக்கையின் இரண்டாம் அலகு நேற்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவினால் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

தற்போது 8 ஆயிரமாக உள்ள உள்ளூராட்சிமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் இந்த குழு நியமிக்கப்பட்டது.

அந்த குழுவின் தொழில்பாடுகள் இந்த வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதியுடன் நிறைவு பெறவிருந்தது.

எனினும், நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைகளால் அதன் தொழில்பாடுகளை நிறைவுறுத்த முடியாது போனது.

எவ்வாறாயினும், தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் காலம் எதிர்வரும் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்து சர்வதேச சமூகத்துக்கு அரசு விளக்கம்

கொழும்பு, ஏப். 12

13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து சர்வதேச சமூகத்துக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி விளக்கமளித்துள்ளார்.

கொழும்பைத் தளமாகக் கொண்டுள்ள இராஜதந்திரிகளுக்கு இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பொருளாதார மீட்சிக்கு இலங்கைக்கு ஆதரவு வழங்கியமைக்காக சர்வதேச சமூகத்தினருக்கு நன்றி தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், இது தொடர்பான முன்னேற்றம் குறித்தும் விளக்கமளித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் ஊக்குவிப்பதற்காக நாட்டின் ஸ்திரத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில், நாடுகளின் பயண ஆலோசனைகளை மறுபரிசீலனை செய்யுமாறும் அமைச்சர் அலி சப்ரி இதன்போது கோரியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியினால் சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டமை உள்ளிட்ட நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகளையும் அமைச்சர் எடுத்துரைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை அமைப்பதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்த மேலதிக தகவல்களையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வழங்கினார் என வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# மீரிகம பொதுச் சந்தைக்குள் மோதல்; ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் பலி

கொழும்பு, ஏப். 12

மீரிகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது சந்தைத்தொகுதியொன்றுக்குள் நேற்று முன் தினம் அதிகாலை இருவருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீரிகம பகுதியிலுள்ள பொதுச் சந்தை கட்டடத்தொகுதிக்குள் வியாபார நடவடிக்கைகளுக்காக வருகை தந்திருந்த இருவர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்த நபர் வைத்தியசாலைக்கு அனுமதிக்க முன்னரே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 55 வயதுடைய முகுருகம்பல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் நால்வருக்கு உடனடியாக இடமாற்றம்

கொழும்பு, ஏப். 12

நான்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களை இடமாற்றம் செய்ய பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் குறித்த இடமாற்றங்கள் இடம்பெறவுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமேற்கு, வடமத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களின் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களான லலித் பதிநாயக்க, ராஜித சிறி தமிந்த, அஜித் ரோஹண மற்றும் சஜீவ மெதவத்த ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் கூறின.

ஈழநாடு



# கம்மன்பிலவின் கருத்து முற்றிலும் பொய்யானது

## கூறுகிறார் சபாநாயகர்

கொழும்பு, ஏப். 12

மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்த கருத்து முற்றிலும் பொய்யானது என சபாநாயகர் தெரிவித்தார்.

இவ்வாறான கருத்துக்கள் நாட்டின் நீதித்துறையை தவறாக வழிநடத்துவதும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கூறினார்.

பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை பொறுப்பான சபை உறுப்பினர் என்ற வகையில் உதய கம்மன்பில செவிமடுத்திருக்கவேண்டும் என சபாநாயகர் தெரிவித்தார்.

யாரோ ஒருவரின் அறிக்கையை தவறாக சித்தரித்து குறுகிய அரசியல் இலக்குகளை அடைய பொதுமக்களைத் தவறாக பயன்படுத்தக்கூடாது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுமக்களை தவறாக வழிநடத்த உதய கம்மன்பில மேற்கொண்ட கீழ்த்தரமான முயற்சி குறித்தும் சபாநாயகர் கண்டனம் தெரிவித்தார். (அ)

# மூன்று நியமனங்களுக்கு ஒப்புதல்

கொழும்பு, ஏப். 12

இரண்டு அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள் மற்றும் தூதுவர் ஒருவரை நியமிப்பதற்கு உயர் அதிகாரிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் புதிய செயலாளராக டபிள்யூ. எஸ். சத்யானந்தவின் நியமனம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் புதிய செயலாளராக எம். எம். நைமுதீனின் நியமனம் ஆகியவற்றுக்கு உயர் பதவிகளுக்கான குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அத்துடன், பிலிப்பைன்ஸிற்கான இலங்கைத் தூதுவராக கலாநிதி சானக ஹர்ஷ தல்பஹேவாவை நியமிப்பதற்கு உயர் அதிகாரிகள் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற உயர் அதிகாரிகள் குழு அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா, தலதா அத்துகோரள மற்றும் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (அ)

# 3 ஆயிரத்து 820 தொன் யூரியா உரம் விவசாய அமைச்சிடம் ஒப்படைப்பு!

கொழும்பு, ஏப். 12

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் மூலம், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் கொள்வனவு செய்யப்பட்ட 3 ஆயிரத்து 820 தொன் யூரியா உரம், இலங்கையின் சிறு நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நோக்கில் விவசாய அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொலனறுவை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத்தளம், குருநாகல் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பொருளாதார நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 72,200க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இந்த பசளை அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட நெல் உற்பத்தியாளர்களிடையே ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவ மூலோபாயத்தை அறிமுகப் படுத்துவதற்கு இது ஆதரவளிக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. (அ)

# 26 அரச மருந்தகங்களால் ஐந்து கோடி ரூபாய் நட்டம்!

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தகவல்

கொழும்பு, ஏப். 12

**2021 ஆம் ஆண்டில், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத் திற்குச் சொந்தமான 50 மருந்தகங்களில் (ஒசுசல) 26 மருந்தங்களுக்கு தேவையற்ற செலவுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 5 கோடியே 32 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது.**

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், அவற்றில் 10 மருந்தகங்களின் இழப்பு, 15 இலிருந்து 175 வீதம்வரை அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி, சிறி ஜயவர்தனபுர வைத்திய சாலை, பண்டாரகம மற்றும் மொனராகலை ஆகிய நான்கு மருந்தகங்கள், கடந்த 2020ஆம் ஆண்டில் இலாபம் ஈட்டியிருந்தது.

எனினும், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டில் மருந்தக ஊழியர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை, ஆனால் ஊழியர்களின் செலவுகள் 10 சதவீதம் முதல் 32 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக கணக்காய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஜயவர்தனபுர வைத்திய சாலை மருந்தகத்தின் ஊழியர்களின் செலவு முந்தைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 47 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளதாகவும், இது மருந்தகத்தின் வருமான இழப்பை நேரடியாகப் பாதித்துள்ளதாகவும் கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2021ஆம் ஆண்டு தம்புள்ளை மருந்தகம் 59 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக நட்டமடைந்துள்ளதாக தெரிவிக்கும் கணக் காய்வு அதிகாரிகள், இது மருந்தகம் ஒன்றுக்கு ஏற்பட்ட பாரிய நட்டம் என தெரிவித்துள்ளனர்.

மருந்துவப் பொருட்கள் சேதம் மற்றும் காலாவதியானமை இந்த இழப்புக்கு முக்கியக் காரணம் என்று கணக்காய்வு அறிக்கை மேலும் கூறுகிறது.

எவ்வாறாயினும், கோவிட் தொற்று பரவலும் இந்த நட்டத்துக்கு முக்கியமானதொரு காரணம் என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் கூறுகிறது. (அ)

# கடலில் தவறி விழுந்த சிறுமி

கொழும்பு, ஏப். 12

பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் உள்ள இறங்குதுறையில் இருந்து நீரில் விழுந்த சிறுமியை மீன்பிடி கப்பலில் பயணித்த நபர் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

புத்தாண்டு காலத்துக்காக மீன் வாங்குவதற்காக குறித்த சிறுமி தனது தந்தையுடன் நேற்று துறைமுகத்திற்கு வந்துள்ளார்.

அவ்வேளையில் மீன்களை கொள்வனவு செய்ய பெருமளவான மக்கள் மீன்பிடித் துறைமுகத்திற்கு வந்துள்ளனர்.

அங்கு ஏற்பட்ட நெரிசலால், மற்றொருவரின் உடலில் அடிபட்டு, சிறுமி சமநிலை இழந்து தண்ணீரில் விழுந்தார்.

படகில் இருந்த மீனவர் ஒருவர் சிறுமி விழுந்ததைக் கண்டு உடனடியாக தண்ணீரில் குதித்து அவரை மீட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (அ)

# திருமண மண்டபம் முன்பாக மோட்டார் சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஏப். 12

ஆவரங்காலில் உள்ள திருமண மண்டபத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீல நிற ஹொன்டா சுப்பர் கப் 90 வகை மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

திருமண மண்டபத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்த நிலையிலேயே திருடப்பட்டுள்ளது.

முற்பகல் 10.30 தொடக்கம் 12 மணியளவிலான காலப்பகுதியில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் தொடர்பான விபரம் அறிந்தவர்கள் உரிமையாளரான சு.பாலசுப்பிரமணியம் என்பவரது 077 765 5527 தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கோ அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் யாழ். குடாநாட்டில் மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2,000 முட்டைகள் பறிமுதல்!

கொழும்பு, ஏப். 12

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நுவரெலியா மாவட்டத்தின் பல முக்கிய நகரங்களில், அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் 20 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபையின் நுவரெலியா மாவட்ட அதிகாரி அமில ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் நுவரெலியா, நானுஓயா, தலவாக்கலை, கொட்டகலை, ஹற்றன், நோர்வூட், மஸ்கெலியா, ராகலை, கினிகத்ஹேனை, ஹப்புகஸ்தலாவ, வட்டவளை போன்ற பிரதேசங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 10 வர்த்தகர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

ஹற்றன் மற்றும் நுவரெலியா நீதவான் நீதிமன்றங்களில், சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், குற்றம் சாட்டப்பட்ட அனைவரிடமிருந்தும் 5,30,000 ரூபா தண்டப்பணமாக வசூலிக்க முடிந்ததாக அமில ரத்நாயக்க கூறினார்.

நுவரெலியா நகரில் முட்டைகளை வைத்திருந்தும் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யாத வியாபாரி ஒருவரிடமிருந்து 2000 முட்டைகளை நீதிமன்றம் பறிமுதல் செய்துள்ளதாகவும், பண்டிகைக்காலம் முடியும் வரை இவ்வாறான சோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமில ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# சிறுமிகள் துஷ்பிரயோகம் தப்பிய மதபோதகர் கைது!

கொழும்பு, ஏப். 12

இருபாலையில் முறையான அனுமதி பெறாமல் இயங்கிய சிறுவர் இல்லத்தில் சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்த 80 வயதான மத போதகர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

கொழும்பில் வைத்தே குறித்த மத போதகர் கைது செய்யப்பட்டார்.

இருபாலை சிறுவர் இல்லத்தில் இருந்து அண்மையில் 3 சிறுமிகள் தப்பிச் சென்றிருந்தனர். இதைத் தொடர்ந்து நடந்த விசாரணையில் அந்த இல்லத்தில் இருந்து 13 சிறுமிகள் மீட்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து அங்கு சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையும் சரியான உணவு கொடுக்கப்படாமல் சித்திரவதை செய்யப்பட்டமை யும் தெரிய வந்தது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், இல்லத்தை நடத்திய 80 வயதான தலைமை மத போதகர் அங்கிருந்து தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், நேற்று அவர் கைது செய்யப்பட்டு கொழும்பிலுள்ள நீதிமன்றம் ஒன்றில் முற்படுத்தப்பட்டார். அவரின் கடவுச் சீட்டை முடக்கிய நீதிமன்றம், அவரை பிணையில் விடுவித்ததுடன் யாழ்ப்பாணம் நீதிமன்றில் சரணடையவும் உத்தரவிட்டது. (ஐ)

# சீனாவுக்கு எதிராக இந்தியா ஆவேசம் காட்டினால் என்ன நடக்கும்?

ரஜ்னிஷ் குமார்

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், பதிலடி கொடுப்பது தொடர் பாக பேசுவதால் அடிக்கடி தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்து வருகிறார்.

ஜெய்சங்கரின் இந்த அணுகுமுறையை விமர்சித்த காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சசி தரூர், 'இவ்வளவு மெல்லிய தோல்' இருப்பது சரியல்ல என்று கூறியிருந்தார். ஜெய்சங்கர் கொஞ்சம் 'கூலாக' இருக்க வேண்டும் என்றும் தரூர் கூறினார்.

மேற்கத்திய நாடுகளுக்கும் பாகிஸ்தானுக்கும் பதிலடி கொடுக்கும் எந்த வாய்ப்பையும் ஜெய்சங்கர் தவறவிட்டதில்லை. ஆனால் சீனாவைப் பொருத்தவரை அவரது அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டது.

அருணாச்சல பிரதேசத்தில் உள்ள பல இடங்களின் பெயர்களை கடந்த ஆறு ஆண்டுகளில் மூன்று முறை மாண்டரின் மொழியில் மாற்றியுள்ளது சீனா.

கடந்த திங்களன்று மூன்றாவது முறையாக அருணாச்சல பிரதேசத்தில் உள்ள 11 இடங்களின் பெயர்களை சீனா மாற்றியுள்ளது.

இந்த பெயர் மாற்றங்கள் அனைத்தும் நரேந்திர மோதியின் ஆட்சியின் போது தான் செய்யப்பட்டுள்ளன.

சீனாவின் இந்த முடிவுக்கு, இந்திய வெளியுறவு அமைச்சகம் மிகவும் கண்டிப்பான எச்சரிக்கையை அளித்துள்ளது.

### திபெத் மீதான தனது நிலைப்பாட்டை இந்தியா மாற்ற வேண்டுமா?


"இதுபோன்ற முயற்சியை மேற்கொள்வது இது முதல் முறையல்ல. நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாகவே உள்ளது, எப்போதும் இருக்கும். இத்தகைய முயற்சிகள் உண்மை நிலையை மாற்றாது," என்று இந்தியா தனது பதிலில் கூறியிருந்தது.

இந்தியாவின் இந்த பதில் மிகவும் பலவீனமாகவும், மென்மையாகவும் இருக்கிறது என்று பல வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவின் பிரபல உத்தி வகுப்பாளர் பிரம்மா செல்லானி இந்தியாவின் பதிலை மறுபதிவு செய்து, "சீனா மீண்டும் இந்தியாவைத் தூண்டியுள்ளது. அருணாச்சல பிரதேசத்தில் பல இடங்களின் பெயர்கள் மீண்டும் மாற்றப்பட்டுள்ளன," என்று எழுதினார்.

'தாய்வானை விட அருணாச்சல பிரதேசம் மூன்று மடங்கு பெரியது. இந்திய வெளியுறவு அமைச்சகம் மீண்டும் சரியான பதிலை அளிக்கத் தவறிவிட்டது. இந்த விஷயம் நடந்த மறுநாள் இந்தியா வெளியிட்ட பதில் மிகவும் மென்மையாக இருக்கிறது."

"சமூக ஊடகங்களின் யுகத்தில் சரியான நேரத்தில் பதிலளிப்பது முக்கியம். ஏனென்றால் நமது அணுகுமுறையை புரிந்து கொள்ள அதிக நேரம் எடுக்காது. சீனாவின் தகவல் போரை ஒப்பிடும்போது இந்திய அரசு இன்னும் மெதுவாகவே உள்ளது."




இவ்வளவு நடந்த பிறகும் திபெத்தை சீனாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தியா கருதுகிறது என்று மற்றொரு ட்வீட்டில் பிரம்மா செல்லானி எழுதியுள்ளார். இதை விட சுய அழிவு ஏற்படுத்தக்கூடிய செயல் வேறு என்ன இருக்க முடியும் என்று செல்லானி குறிப்பிட்டார்.

பிரம்மா செல்லானியின் கூற்றை ஆதரித்த இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் கன்வால் சிபல், "இந்தியாவின் பதில் மிகவும் மென்மையானது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இந்தியா இன்னும் கடுமையான மொழியில் பதிலளித்திருக்க வேண்டும். திபெத் மீதான ஆக்கிரமிப்பின் அடிப்படையில் அருணாச்சலப் பிரதேசத்தின் மீது சீனா உரிமை கோருகிறது. அத்தகைய சூழ்நிலையில் நாமும் நமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளலாம்," என்று அவர் கூறியுள்ளார்.

### இந்தியாவின் உறுதியற்ற அணுகுமுறை?

சீனாவின் ஆக்ரோஷமான நிலைபாட்டிற்கு எதிராக இந்தியாவின் அணுகுமுறை உண்மையில் உறுதியற்றதாக உள்ளதா?

அப்சர்வர் ரிசர்ச் ஃபவுண்டேஷனில், ஆய்வுகள் மற்றும் வெளியுறவுக் கொள்கையின் துணைத் தலைவர் பேராசிரியர் ஹர்ஷ் வி பந்த் அவ்வாறு கருதவில்லை.

"அருணாச்சல பிரதேசம் தொடர்பாக சீனா செய்து கொண்டிருப்பது புதிய விஷயம் அல்ல. பெயர் மாற்றம் தொடர்பாக இந்தியா அளித்த பதில் போதுமானது. அருணாச்சல பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க பிரச்சனை எதுவும் இல்லை," என்று பேராசிரியர் பந்த் குறிப்பிட்டார்.

"லடாக்கில் பிரச்சினை உள்ளது. ஏனென்றால் சீனா அங்கு நிறைய பணிகளை செய்கிறது. அதற்கு இந்தியா பதில் அளிக்க வேண்டும். அங்கே சென்று பேச்சு மூலமாக பதில் கூற முடியாது. இந்தியாவும் எல்லையில் உள்கட்டமைப்பை அதிகரித்து வருகிறது. சீனாவும் அதிக வேலைகளைச் செய்கிறது. பதில் கூற நாம் தயார் இருந்தால் மட்டுமே சீனாவை எதிர்கொள்ளமுடியும்."

"நான்கு தசாப்தங்களுக்கு முன்பே சீனாவை எதிர்கொள்ளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால், இந்தியா தகுந்த பதிலடி தந்திருக்கும். உங்கள் பதில் உங்கள் திறனைப் பொருத்தே அமையும். 30 ஆண்டுகளுக்கு முன்பு சீனா அளித்த பதில் போல இன்றைய பதில் இல்லை. அதன் திறன் அதிகரித்த போது, பதிலும் ஆக்ரோஷமாக மாறியது," என்கிறார் பேராசிரியர் பந்த்.

"இந்தியாவும் தனது திறனை அதிகரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறது. இந்தியாவின் பதில், வரும் காலங்களில் மாறலாம். விஷயங்களை சிக்கலாக்குவதால் எதுவும் கிடைக்காது. திபெத்தை சீனாவின் ஒரு பகுதியாகக் கருதுவதை இந்தியா நிறுத்த வேண்டும், "ஒரே சீனா கொள்கையை" ஏற்க மறுக்க வேண்டும் என்று பலர் கூறுகின்றனர். அமெரிக்காவால் கூட இதை செய்ய முடியவில்லை. இதையெல்லாம் செய்து நாம் என்ன சாதிக்கமுடியும்?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

"இப்போது தலாய்லாமா கூட சுதந்திர திபெத்திற்கு பதிலாக தன்னாட்சி திபெத்தைப் பற்றி பேசுகிறார். தாய்வானிலும் சீனா தொடர்பாக மக்கள் பிளவுபட்டுள்ளனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரே சீனா கொள்கையை ஏற்காமல் நாம் என்ன சாதிப்போம்,?" என்று பேராசிரியர் பந்த் கேட்கிறார்.

"கடந்த காலங்களில் நாம் பல தவறுகளை செய்துள்ளோம். சீனாவின் ஆக்கிரமிப்புக்கான சான்றுகள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன, ஆனால் நாம் கொள்கையை மாற்றவில்லை. முன்பே கவனம் செலுத்தியிருந்தால் நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும்."

### நரேந்திர மோதி அரசின் மென்போக்கின் பொருள்

கடந்த தசாப்தத்தில், இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு சீனா பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, கிழக்கு லடாக்கின் கல்வானில் நடைமுறை கட்டுப்பாட்டுக் கோட்டில் இரு நாட்டு வீரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதில் இருநாடுகளையும் சேர்ந்த மொத்தம் 24 வீரர்கள் உயிரிழந்தனர். அங்கு இன்னும் பதற்றம் உள்ளது, தீர்வு எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

சீனாவை எதிர்கொள்ள ஏராளமான ராணுவ வீரர்களை எல்லையில் நிறுத்தியுள்ளதாகவும், ராணுவ கட்டுமான பணிகள் நடந்து வருவதாகவும் பாரதிய ஜனதா அரசு கூறுகிறது.

2020-ல் எல்லையில் நடந்த மோதலுக்குப் பிறகு இந்தியா தனது நிலத்தை சீனாவிடம் இழந்துவிட்டது என்று கூறும் சில செய்திகளும் வெளியாகியுள்ளன.

சீனாவை பற்றி பேசுவதை இந்திய பிரதமர் தவிர்த்து வருகிறார். மோதி அரசின் மௌனம் சீன எதிர்ப்பு உத்தியின் ஒரு பகுதியா அல்லது கட்டாயமா?

புது டெல்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சர்வதேச அரசியல் மையத்தின் இணைப் பேராசிரியரான ஹேப்பிமோன் ஜேக்கப், அமெரிக்க இதழான ஃபாரின் பாலிசியில் ஏப்ரல் 2 ஆம் தேதி ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

"சீன ஆக்கிரமிப்புக்கு இந்தியா பதிலளிப்பது வெறும் ராணுவம் தொடர்பானது மட்டும் அல்ல. அரசியல் மற்றும் வணிக நலன்கள் காரணமாக இது மிகவும் சிக்கலான ஒன்றாக மாறுகிறது. இத்தகைய சூழ்நிலையில், இந்தியா சீனாவுக்கு பதிலடி கொடுக்க முடிவு செய்தால், அது எப்போது, எப்படி பதிலளிக்கும் என்பதை இந்தியா சிந்திக்க வேண்டியது மிகவும் முக்கியமானது," என்று ஜேக்கப் இந்த கட்டுரையில் எழுதியுள்ளார்.

2022ல் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 18 டிரில்லியன் டாலராகவும், இந்தியாவின் ஜிடிபி 3.5 டிரில்லியன் டாலருக்கு குறைவாகவும் இருந்தது.

கடந்த ஆண்டு சீனாவின் பாதுகாப்பு பட்ஜெட் 230 பில்லியன் டாலர்கள் ஆகும். இது இந்தியாவின் பாதுகாப்பு பட்ஜெட்டை விட மூன்று மடங்கு அதிகம். சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான இந்த பெரிய இடைவெளி காரணமாக சீனாவின் கை மேலோங்கி உள்ளது.

"சீனாவுடன் மோதல் சூழ்நிலை ஏற்பட்டால், அமெரிக்கா மற்றும் பிற சக்திகள் வெளிப்படையாக இந்தியாவுக்கு ஆதரவாக வரும் அளவிற்கு அந்த நாடுகளுடனான ராஜாங்க உறவு வலுவாக உள்ளதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. சீனாவுடன் பதற்றம் ஏற்பட்டால் தனக்கு ஆதரவாக தனது கூட்டாளிகள் வருவார்கள் என்ற எந்த உத்தரவாதத்தையும் இந்தியா இதுவரை பெறவில்லை," என்று ஹேப்பிமோன் ஜேக்கப் எழுதியுள்ளார்.

'இந்தியாவின் வர்த்தகம் சீனாவை சார்ந்திருக்கிறது, உலகில் உள்ள எந்த நாட்டுடனும் இந்தியாவுக்கு பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் இல்லை. ஒரு ராணுவ நெருக்கடி ஏற்பட்டால், இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய குவாட் என்ற குழுவின் ராணுவ உதவியை கற்பனை செய்வது மிகவும் அவசரமாக இருக்கும். சீனாவுடன் மோதல் ஏற்படும் பட்சத்தில் எந்தவொரு வெளி நாட்டிலிருந்தும் ராணுவ உதவியை எதிர்பார்ப்பது இப்போதுவரை கடினம்."

"சீனாவுடனான மோதலில் பின்தங்கினால் என்ன செய்வது என்பது குறித்து இந்தியாவிடம் தெளிவான திட்டம் இல்லை. இந்தியாவை விட சீனாவுக்கு அதிக பலம் உள்ளது. அது இந்தியாவுக்கு ஒரு பெரிய நெருக்கடியை உருவாக்கக்கூடும். இந்தியா வெற்றி கிடைக்கும் என்ற உறுதியுடன் போரில் ஈடுபட முடியாது, ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் இந்தியா சீனாவுக்கு எதிராக ஒரு பெரிய தோல்வியை சந்தித்துள்ளது," என்று ஹேப்பிமோன் ஜேக்கப் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ரீதியாகவும் இந்தியாவுக்கு பல கடுமையான காயங்களை சீனா ஏற்படுத்தக்கூடும் என்று ஜேக்கப் கூறுகிறார்.

"இந்தியா உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது. சீனாவின் மலிவான தயாரிப்புகளும் அதற்கு பங்களிக்கின்றன. இந்த தயாரிப்புகள், உரங்கள் முதல் தரவு செயலாக்க அலகுகள் வரை உள்ளன. எல்லையில் சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அதன் மீது வர்த்தகக் கட்டுப்பாடுகளை விதிப்பது இந்தியாவுக்கே பாதகமாக அமையக்கூடும். சமீபத்தில் அரவிந்த் பனகரியாவும் இதை அடிக்கோடிட்டிருந்தார்." என்று அவர் எழுதியுள்ளார்.



# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்காக ஏன் உண்மை ஆணைக்குழு இல்லை?



கலாநிதி ஜெகான் பெரேரா

மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின்போது கூட கண்டிராத வகையிலான அதிர்ச்சியிலும் பயங்கரத்திலும் முழு நாட்டையும் ஆழுத்திய 2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு மூன்று ஈஸ்டர் ஞாயிறுகள் கடந்துவிட்டன. மூன்று தேவாலயங்களிலும் மூன்று ஆடம்பர ஹோட்டல்களிலும் பத்து தற்கொலைக் குண்டுதாரிகளினால் ஏககாலத்தில் ஒருங்கிசைவான முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 272 பேர் கொல்லப்பட்டதுடன் 500 க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். இவர்களில் முழு குடும்பங்களும் பெற்றோருடன் பிள்ளைகளும் இலங்கையின் அன்பையும் நட்பிணக்கத்தையும் அனுபவிக்க வந்த வெளிநாட்டவர்களும் அடங்குவர்.

இரு மாதங்களாக நாடு முடங்கிப்போய்க் கிடந்தது. அப்போது பரவிய வதந்திகளினால் பீதியடைந்த மக்கள் சந்தடிமிக்க பகுதிகளுக்கு வரத் தயங்கினர். உள்நாட்டில் முன்னைய முரண்நிலை வரலாற்றைக் கொண்டிராத ஒரு சிறுபான்மை மதக்குழு இன்னொரு சிறுபான்மை மதக்குழுவுக்கு எதிராக மேற்கொண்ட அந்த குண்டுத் தாக்குதல்களுக்கு எந்தவிதமான தர்க்க நியாயமும் கிடையாது. இந்த தாக்குதல்கள் ஒரு தசாப்தத்துக்கு முன்னர் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த பிறகு முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்கப் பணிகள் சகலதையும் கெடுத்துவிட்டன.

குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு நிலவிய குழப்ப நிலை மற்றும் ஊகங்களுக்கு மத்தியில் முழு நாடும் அச்சத்தில் உறைந்திருந்தது. ஆனால் சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அத்தகைய அச்சவுணர்வை வெளிக்காட்டவில்லை. தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு அவலம் நிறைந்ததாக காட்சி தந்த இடங்களுக்கு முதலில் வந்தவர்களில் ஒருவர் அப்போது எதிர்க்கட்சியில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. அப்போது ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் விருப்பத்தைக் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எதிர்க்கட்சியில் இருந்து அந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு மிகவும் பொருத்தமான வேட்பாளர் என்று உடனடியாகவே தன்னை அறிவித்ததை காணக்கூடியதாக இருந்தது.

ஒரு தசாப்தத்துக்கு முன்னதாக விடுதலை புலிகளை போரில் தோற்கடித்ததைப் போன்று தேசிய பாதுகாப்பை மீண்டும் நிலைநாட்டுவதாக அவர் உறுதியளித்தார். பீதியில் வாழ்ந்துகொண்டிருந்த நாட்டு மக்கள் மத்தியில் அவரது உறுதிமொழி எடுபட்டது. 2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் அவரை ஒரு மிகப்பெரிய பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்தனர்.

ஆனால், அடுத்தடுத்து பதவிக்கு வந்த மூன்று ஜனாதிபதிகளின் கீழான அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்ற உண்மையை வெளிப்படுத்தவில்லை. இதுவரையில் அது விடயத்தில் உயர்நீதிமன்றம் மாத்திரமே சிறந்த பணியை செய்திருக்கிறது எனலாம். சட்டரீதியான நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் உகந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படாத நிலையில் கத்தோலிக்க திருச்சபையும் வேறு குடிமக்களும் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் வழக்கொன்றை அடுத்தே அது நடந்தது.

விசாரணை அறிக்கைகளை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நான்கு சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளும் தங்களுக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவல் தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் மூலம் பொறுப்பை அலட்சியம் செய்ததாக அவர்களை குற்றவாளிகளாகக் கண்டது. அவர்களுக்கு எதிராக கோடிக்கணக்கான ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால் குண்டுத்தாக்குதல்களின் பின்னணியில் இருந்திருக்கக்கூடிய சூத்திரதாரிகளை உயர்நீதிமன்றம் அடையாளம் காணவில்லை. அத னால் உண்மையை கண்டறிவதற்கு தேடுதல் தொடருகி றது.

இதுவரையான அரசாங்க விசாரணைகள் திருப்தியானவையாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும் அமையவில்லை என்று கார்டினல் மல்கம் ரஞ்சித் அண்மையில் ஊடக நேர்காணல் ஒன்றில் தெரிவித்தார். ‘உத்தியோகபூர்வ நீதி வழிமுறைகள் எம்மைப் பொறுத்தவரை நேர்மையாக நடந்துகொள்ளவில்லை. ஈஸ்டர் தாக்குதல்கள், அவற்றுக்கான காரணிகள், அதில் பங்கேற்றவர்கள், சூத்திரதாரிகள் மற்றும் ஏனைய சக்திகள் தொடர்பில் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட விசாரணை ஒரு போதும் மேற்கொள்ளப்படவில்லை” என்று அவர் சொன்னார்.

தற்போதைய ஜனாதிபதிக்கு சட்ட நடவடிக்கைகளில் இருந்து விலக்கு இருப்பதால் அவர் பதவியில் இருந்து விலகியதும் எதிர்காலத்தில் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்படும் என்று எச்சரிக்கை செய்த கார்டினால், ஜனாதிபதி எல்லாக் காலத்திலும் அந்த பதவியில் இருக்கப்போவதில்லை. ஆனால் கத்தோலிக்க திருச்சபை தொடர்ந்து இருக்கும். அவருக்கு பிறகு வருபவர்களும் நடவடிக்கைகளை தொடரவேண்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டினார்.

## உண்மை ஆணைக்குழு

உண்மை வெளிப்படாத பட்சத்தில் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான சர்ச்சைக்கு முடிவு கிடைக்காது. சந்தேகங்கள் மாத்திரமே ஆழமாக தொடரும். கார்டினல் மல்கம் ரஞ்சித் தனது மிகவும் அண்மைய அறிக்கைகளிலும் உரைகளிலும் முன்னரை விடவும் கூடுதலான அளவுக்குவெளிப்படையாக கருத்துக்களை தெரிவித்திருப்பதை காணக்கூடியதாக இருந்தது. ‘ஈஸ்டர் தாக்குதல்கள் இடம்பெற்று இப்போது எத்தனை வருடங்கள் கடந்துவிட்டன. நான்கு வருடங்கள். இன்னமும் நீதி கிடைக்கவில்லை. உண்மையில் என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியவில்லை. பல விடயங்களை ஆட்கள் பேசுகிறார்கள். நாம் நீதிக்காகவும் உண்மைக்காகவும் போராட வேண்டியது முக்கியமானதாகும். அது தான் கிறிஸ்தவம்” என்று அவர் கொழும்பில் ஈஸ்டர் நள்ளிரவு ஆராதனையில் கூறினார்.

**ஜனாதிபதி கடந்த காலத்தில் கிறிமினல் குற்றங்களாக இருந்தாலென்ன பொருளாதாரக் குற்றங்களாக இருந்தாலென்ன அவற்றை செய்தவர்களை உயர் பதவிகளில் இருந்து விலக்குவதன் மூலம் தனது நம்பகத்தன்மையை வலுப்படுத்திக் கொள்ளமுடியும்.**

நீதியைப் பெறுவதில் திருச்சபைக்கு இருக்கும் ஊசலாட்டமில்லாத உறுதிப்பாட்டை வெளிக்காட்டுவதற்கு அப்பால் இது 1979 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் பெருமளவு துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுத்த கொடூரமான ஏற்பாடுகளை கொண்டிருந்தபோதிலும் கூட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களை எவ்வாறு தடுக்கத் தவறியது என்பதற்கு தெளிவான ஒரு உதாரணமாகவும் விளங்குகிறது. இந்த படிப்பினையை மறந்த நிலையில் தற்போதைய அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை விடவும் மிகவும் மோசமான பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஒன்றை முன்வைத்திருப்பது வேதனைக்குரியதாகும்.

மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின்போது நடந்தவற்றை ஆராய்ந்து தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதற்கு உண்மை ஆணைக்குழுவொன்றை அமைக்கப்போவதாக அரசாங்கம் செய்திருக்கும் அறிவிப்பு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களை கையாளப்போவதில்லை. பதிலாக 1983 ஜூலை 24 தொடக்கம் 2009 மே 18 வரையான காலப்பகுதியையே உத்தேச ஆணைக்குழு ஆராயவிருக்கிறது. விளக்கமாக கூறப்படாவிட்டாலும், இது கெரில்லா போரில் தங்களது போராட்டத்தை தொடங்கிய தமிழீழ விடுதலை புலிகள் மற்றும் ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களினால் முன்னெடுக்கப்பட்ட பிரிவினைவாத கிளர்ச்சிக் காலப்பகுதியேயாகும்.

மோதலின்போது ஆட்களுக்கு அல்லது சொத்துக்களுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் சேதம் அல்லது தீங்கு தொடர்பில் உண்மையான, துல்லியமான, பக்கச்சார்பற்ற, முழுமைவாய்ந்த பதிவுகளை நிறுவுவதன் மூலம் இலங்கை மக்கள் மத்தியில் தேசிய ஐக்கியம், சமாதானம், சட்டத்தின் ஆட்சி, சகவாழ்வு, சமத்துவத்துடனான சகிப்புத்தன்மை, பல்வகைமையை மதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதே ஆணைக்குழுவின் ஆணையாக இருக்கும்.

விசாரணைக்கான காலப்பகுதியை 1983 ஜூலை 24 க்கும் 2009 மே 18 க்கும் இடைப்பட்டதாக மட்டுப்படுத்துவது ஆணைக்குழுவின் ஆணை மட்டுப்படுத்தப்படுவதன் ஒரு அறிகுறியாகும். விடுதலை புலிகள் ஆதிக்கம் கொண்ட தமிழ் தீவிரவாத இயக்கமாக இருந்த காலப்பகுதியை மாத்திரமே ஆணைக்குழு கவனத்தில் எடுக்கும். ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னரும் கூட பெருமளவு மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்றன. போரின் முடிவுக்கு பின்னரான நாட்களில் பல பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்ட விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் காணாமல் போயினர்.

கம்பி வேலிகளினால் சூழப்பட்ட முகாம்களில் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான குடிமக்கள் ஆறு மாதங்களுக்கும் கூடுதலான காலமாக அடைத்துவைக்கப்பட்டனர். அவர்களில் பலர் காணாமல் போயினர். சிலர் அதிகாரிகளுக்கு பணத்தைக் கொடுத்து வெளியே சென்றனர். மற்றவர்கள் பாதுகாப்பு படைகளினால் அழைத்துச் செல்லப்பட்டனர். உண்மை ஆணைக்குழுவின் ஆணையின் தொடக்க திகதிக்கு முன்னதாகவே நீண்ட காலமாக இனப்பிரச்சினை இருந்துவந்தது. முடிவுத் திகதிக்கு பின்னரும் அந்த பிரச்சினை தொடருகிறது. அதனால் ஆணை போதுமான ஒன்று அல்ல.

குறிப்பிட்ட திகதிகள் விசேடப்படுத்தப்படுவது இனப்போர் மாத்திரம் தான் உண்மை ஆணைக்குழுவினால் ஆராயப்படுமா அல் லது 1987 -- 1989 காலப்பகுதியில் இடம்பெற்ற ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கிளர்ச்சியும் விசா ரணை செய்யப்படுமா என்ற கேள்வியை எழுப்புகிறது. இனப்பிரச்சினையில் இருந்து வேறுபட்ட தான அந்த கிளர்ச்சியின்போது பெரும் எண்ணிக்கையான மக்கள் உயிரிழந்தார்கள்.

உண்மை ஆணைக்குழுவின் நிபந்தனைகளும் வரைமுறைகளும் வகுக்கப்படுகின்ற செயன்முறை பகிரங்கமான ஒன்றாக இல் லாமல் பெருமள வுக்கு இரகசியமானதாக இருப்பது சந்தேகங்களை கிளப்புகிறது. ஆனால் உதவியைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் நாடுகின்ற தென்னாபிரிக்காவில் நடந்தது முற்றிலும் வேறுபட்டதாகும். தனது நோக்கங்கள் எவை என்பதை வரும் நாட்களில் அரசாங்கம் தெரி யப்படுத்தக்கூடும். ஆனால் தற்போதைக்கு அது இந்த செயன்முறையை தொடருவதற்கு தீர்மானித்திருக்கிறது போன்று தெரிகிறது.

## ஜனாதிபதியின் உறுதிமொழி

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களும் அவற்றின் விளைவுகளும் உத்தேச உண்மை ஆணைக்குழுவின் ஆணையின் அங்கமாக இருக்கப்போவதில்லை என்பது தெளிவானது. அந்த ஆணை போரின் கடைசித் திகதியான 2009 மே 18 வரை மாத்திரமே நீட்டிக்கப்படும். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் போர் முடிவுக்கு வந்து ஒரு தசாப்த காலத்துக்கு பிறகு இடம்பெற்றதை காரணம் காட்டி அவற்றை ஆணைக்குழுவின் ஆணைக்குள் உள்ளடக்காதமைக்கு நியாயம் கற்பிக்கப்படலாம். ஈஸ்டர் தாக்குதல்கள், மிகவும் நீண்ட காலமாக தொடர்ந்த போரைப் போலன்றி, தனியொரு சம்பவம் மாத்திரமே.

ஆனால் ஈஸ்டர் தாக்குதல்களை உண்மை ஆணைக்குழு விசாரணை செய்யவேண்டிய தேவையை அலட்சியம் செய்ய முடியாது. ஏனென்றால் என்ன நடந்தது என்ற உண்மை தொடர்ந்து மூடி மறைக்கப்படுகிறது. அந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கான நோக்கமும் அதன் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதும் இன்று வரை புதிராகவே இருந்துவருகிறது.

வழமைக்கு மாறான அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துக்காக கிறிஸ்தவ பக்தர்கள் பலிக்கடாவாக்கப்பட்டார்கள் என்ற நம்பிக்கையின் காரணமாகத்தான் உண்மையை கண்டறிந்து உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் கார்டினல் மல்கம் ரஞ்சித் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்று தோன்றுகிறது. இறந்து போனவர்களினால் நீதி கோரி குரலெழுப்பமுடியாது. அதனால் உண்மையை கண்டறியவேண்டியது உயிருடன் இருப்பவர்களின் கடமை. கடந்த காலத்தில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய நிகழ்வுகளை விசாரணை செய்வதற்கு உண்மை ஆணைக் குழுக்களுக்கு உலகளாவ முக்கியத்துவம் கொடுக்கப்படுவதற்கான காரணங்களில் இது ஒன்று.

பொறுப்புக்கூறலுக்கும் நீதிக்குமாக ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு பதிலாக அரசாங்க தலைவர்கள் இதுவரை ஈஸ்டர் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறுவதை உறுதிசெய்வதில் கொஞ்சமேனும் அக்கறை காட்டவில்லை. துரதிர்ஷ்டவசமாக இது தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பொறுத்தவரையிலும் கூட வேறுபட்டதாக இல்லை. பொருளாதார நெருக்கடி எவ்வாறு உருவானது என்பதை ஆராய்ந்து அந்த நெருக்கடியை கையாளத் தவறிய அரசாங்கத்தின் தவறுகளுக்கு பொறுப்புக்கூற வைப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை. பொருளாதாரத்தை சீர்குலைத்தவர்கள் தொடர்ந்தும் அதிகாரப் பதவிகளில் இருக்கிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட ஈஸ்டர் செய்தியை நோக்கும்போது கார்டினல் மல்கம் ரஞ்சித்தின் உணர்வுகளை அவர் நன்கு புரிந்துகொண்டு சாந்தப்படுத்த முயற்சித்திருக்கிறார் என்று தெளிவாக தெரிகிறது. “ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் விளைவாக ஏற்பட்ட கடுமையான வேதனையை நான் நன்கு அறிவேன். அந்த வேதனையை நான் பகர்ந்துகொள்கிறேன். அந்த கொடுமையான சம்பவத்துடன் தொடர்புபட்ட சட்ட செயன்முறைகள் எந்த விதமான செல்வாக்கிற்கும் உட்படாத முறையில் சுதந்திரமாகவும் பக்கச்சார்பு இல்லாமலும் முன்னெடுக்கப்படும் என்று நான் உறுதிகூறுகிறேன். பாதிக்கப்பட்ட சகலருக்கும் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அடிப்படை வேலைகள் மற்றும் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஈஸ்டர் தாக்குதல்களைப் போன்ற நீசத்தனமான செயல்கள் மீண்டும் இடம்பெறுவதை தடுப்பதன் மூலம் எமது நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் எந்தவிதமான தடுமாற்றமும் இல்லாத பற்றுறுதியை நான் கொண்டிருக்கிறேன் “ என்று ஜனாதிபதி செய்தியில் கூறினார்.

தனது இந்த பற்றுறுதியை மீளவும் உறுதிப்படுத்தியதற்கு மேலதிகமாக ஜனாதிபதி கடந்த காலத்தில் கிறிமினல் குற்றங்களாக இருந்தாலென்ன பொருளாதாரக் குற்றங்களாக இருந்தாலென்ன அவற்றை செய்தவர்களை உயர் பதவிகளில் இருந்து விலக்குவதன் மூலம் தனது நம்பகத்தன்மையை வலுப்படுத்திக்கொள்ளமுடியும். ●

# வெசாக் பண்டிகையை சிறப்புற கொண்டாடவேண்டியது அவசியம்

## பிரதமர் தினேஸ் குணவர்தன



கொழும்பு, ஏப்ரல் 12

வெசாக் பண்டிகையை சிறப்புற கொண்டாட வேண்டியது அவசியம் என்று பிரதமர் தினேஸ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

வெசாக் கொண்டாட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போதே பிரதமர் தினேஸ் குணவர்தன இதனை வலியுறுத்தியுள்ளார்.

இந்த சந்திப்பில் கொழும்பு நகருடன் தொடர்புடைய பௌத்த தேரர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது தொடர்ந்துரைத்த பிரதமர் தினேஸ் குணவர்தன,

வெசாக் பண்டிகையை வெற்றியடையச் செய்வதற்கு இளம் தலைமுறைக்கு வழிகாட்டும் வேலைத்திட்டமாக இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இளம் சந்ததியினர், பொது மக்களையும் இணைத்துக் கொண்டு வெசாக் பண்டிகையை சிறப்பாக கொண்டாட வேண்டியது அவசியமாகும்.

கொழும்பு பிரதேசத்தில் உள்ள விகாரைகளில் வெசாக் பண்டிகையை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் இந்த புண்ணிய நிகழ்வில் பங்கேற்க வேண்டியது அவசியமாகும்.

வெசாக் பண்டிகை தொடர்பிலான சுற்றுநிருபத்தை மட்டுப்படுத்த வேண்டாம்.- என்றார்.

இதன்போது கருத்துரைத்த எல்லே குணவங்ச தேரர் வெசாக் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடாவிட்டால் வெசாக் பௌர்ணமியும் அமவாசையை போன்றாகும். வெசாக் பௌர்ணமிக்கான அலங்காரம் என்பது ஒளிர வேண்டும்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு பல எலக்ட்ரீசியன்கள், இசைக்கலைஞர்கள், சிற்பிகள், ஓவியர்கள் மற்றும் நடிகர்கள் நாட்டுக்கு கொடையாகக் கிடைத்துள்ளனர்.

நாட்டிலுள்ள பிரதான நடிகர், நடிகைகள், பாடகர்கள், இசைக்கலைகஞர்கள் ஆகியோர் வெசாக் நாடகங்கள், வெசாக் இசை நிகழ்வுகளின் மூலம் அறிமுகமானவர்களே.

வெசாக் பண்டிகையின் மூலம் நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார். (அ-கே)

# கம்மன்பிலவின் கருத்து முற்றிலும் தவறு!

## சபாநாயகர் மகிந்த யாப்பா

கொழும்பு, ஏப். 12

பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்திருக்கும் மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்திருந்த கருத்து முற்றிலும் தவறானது என்பதுடன் நீதிமன்றத்தை பிழையாக வழி நடத்தக்கூடியதாகும் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு இருக்கும் மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பாக சபாநாயகரை சுட்டிக்காட்டி தெரிவித்திருந்த கருத்துக்கு மறுப்பு தெரிவித்து, சபாநாயகர் அலுவலகம் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு தெரிவித்ததாக குறிப்பிட்டு ஏதாவது கருத்து தெரிவிப்பதாக இருந்தால், பொறுப்புவாய்ந்த பாராளுமன்ற உறுப்பினராக உதய கம்மன்பில, அதனை தெரிவிப்பதற்கு முன்னர், அதற்கு ஆதாரமான ஹன்சாட் அறிக்கையில் பதிவிடப்பட்டிருக்கும் ஒலி, ஒளி ஊடகத்தை சரியாக பரீட்சித்து பார்ப்பதே பொருத்தமாகும்.

அத்துடன், வேறு ஒருவரின் கூற்றை பிழையாக திரிபுபடுத்தி குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொது மக்களை பிழையாக வழிநடத்த, உதய கம்மன்பில எடுக்கும் கீழ்த்தரமான முயற்சியை முற்றாக நிராகரிப்பதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மீளாய்வு செய்வதற்கு குழு!

## ஜனாதிபதியை கோர பெரமுன முடிவு

கொழும்பு, ஏப். 12

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் நீதியமைச்சருக்கு நம்பிக்கையில்லாத தன்மை காணப்படுகிறது. வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூல வரைவை மீளாய்வு செய்ய சட்ட வல்லுநர்களை உள்ளடக்கிய விசேட மீளாய்வு குழு ஒன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுத்தவுள்ளோம் என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் ஜனநாயக கொள்கைக்கு முரணான வகையில் காணப்படுவதாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட பின்னணியில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் கருத்து, பேச்சு சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடும் உரிமை ஆகிய அடிப்படை உரிமைகளை சவாலுக்குட்படுத்தும் சட்டமூலங்களுக்கு கட்சி என்ற ரீதியில் ஒருபோதும் ஆதரவு வழங்க போவதில்லை.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் 'பயங்கரவாதம்'என்ற சொற்பதத்திற்கு நீண்ட வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் போது சகல செயற்பாடுகளையும் பயங்கரவாதம் என்ற வரையறைக்குள் உள்வாங்க முடியாது. ஆகவே பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கான வரைவிலக்கணம் மட்டுப்படுத்தப்பட வேண்டியது அத்தியாவசியமானது. - என்றார்.






# மேட்டுவட்டை வீட்டுத்திட்டம் பயனாளிகளிடம் கையளிப்பு

## 19 வருட இழுத்தடிப்புக்கு முற்றுப்புள்ளி

அக்கரைப்பற்று, ஏப். 12

**2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மருதமுன மக்களுக்காக கட்டப்பட்ட மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத்திட்டம் இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த நிலையில் அவற்றில் ஒரு தொகுதி வீடுகள் நேற்று முன் தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.**



இந்த வீட்டுத் திட்டத்திற்குரிய பயனாளிகள் தெரிவு செய்யப்படுவதில் தொடர்ந்தும் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாகவே இந்த வீடுகள் வழங்கப்படாமல் இருந்து வந்தன.

பல அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும் இந்த வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட்டு அதனை விரைவில் வழங்குவோம் என்று வாக்குறுதிகளை வழங்கியபோதிலும் இன்றுவரை அவர்களால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனது.

இந்த வீட்டுத் திட்ட வீடுகள் உரிய மக்களுக்கு வழங்கப்படாமல் இருந்தமையால் அவை சேதமடைந்து மிகவும் பழுதடைந்த நிலையிலேயே காணப்பட்டன.

இந்நிலையில் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஜனாதிபதியினால் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் நியமிக்கப்பட்டார்.

கல்முனை பிரதேச அபிவிருத்திக் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது மருதமுனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் மருதமுனை மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத் திட்டம் தொடர்பில் கேள்வி எழுப்பியதுடன் எப்போது இந்த வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்படும் என்று கேட்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், இந்த வீட்டுத் திட்டம் இதுவரை மக்களுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயம். இனியும் இதனை இழுத்தடிக்காமல் உரிய பயனாளிகளை தேர்வு செய்து அந்த வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுயளித்தார்.

எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் இந்த வீட்டுத் தொகுதி மக்களிடம் கையளிக்கப்படும். இதற்காக கல்முனை பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கைகளை எடுத்து உரிய பயனாளிகளை தெரிவு செய்யும் பட்டியலை பூரணப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக குறித்த வீட்டுத் திட்டத்தை மக்களுக்கு கையளிப்பதற்காக மருதமுனைக்கு அண்மையில் விஜயம் செய்த எஸ்.எம்.எம்.முஷாரப் 65 மீற்றர் வீட்டுத் திட்டத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபருடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமைகளை விளக்கினார்.

இதற்கமைவாக ஏப்ரல் 10 ஆம் திகதி இந்த வீடுகளை கையளிப்பதற்கான செயற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்புடன் இணைந்து கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

அந்த வகையில் இந்த வீட்டுத் திட்டத்தின் ஒரு தொகுதி வீடுகள் நேற்று முன் தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்து கொண்டு வீடுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(அ)

# வட்டுவான் இறால் வளர்ப்பு பிரச்னைக்கு தீர்வு கிட்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 12

மட்டக்களப்பு - வாகரை, வட்டுவானில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 27 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இறால் வளர்ப்பு திட்டம், தற்போது தனியார் ஒருவரின் ஆளுமைக்குள் சென்றுள்ளது. இந்தப் பிரச்னைக்கு நீதிமன்றத்தின் ஊடாகவே அல்லது பேபச்சுவார்த்தை மூலமாக ஒரு மாதகாலத்தினுள் தீர்க்கப்படுமென கடற்றொழில் மற்றும் மீன்பிடித் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வட்டுவான் இறால் வளர்ப்பு திட்ட பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல், அமைச்சர் டக்ளஸ் தலைமையில், மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக கொண்டுவரப்பட்ட இறால் வளர்ப்புத் திட்டம் தெரிவு செய்யப்பட்ட 27 பயனபளிகளுக்கு வழங்கப்பட்டது. அதனை தற்போது தனி ஒருவர் தனது ஆளுமைக்குள் உட்படுத்தியுள்ளார்.



இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் எனது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதுடன், மாவட்டத்தில் உள்ள பிரச்னைகள் தொடர்பாக ஆராய்ந்தபோது இந்தப் பிரச்னை தெரியவந்தது. எனவே, இது ஒரு இடியப்பச் சிக்கலாக உள்ளது. இதற்கு நீதிமன்றத்தின் ஊடாக அல்லது பேச்சுவார்த்தை ஊடாக ஒரு மாத காலப்பகுதியில் தீர்வு எட்டப்படும்.

மட்டக்களப்பில் மாத்திரமல்ல, இலங்கை பூராகவும் சட்டவிரோத கடற்றொழில் ஈடுபடுவதை தடுப்பதற்கு அந்தந்த பகுதி மீனவர் சங்கங்கள் மற்றம் கடற்படையினர், கடல் தொழில் திணைக்களம், பொலிஸார் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அத்துடன், மட்டக்களப்பில் கடலில் வலையை வீசிவிட்டு, அடுத்த நாள் அதனை எடுக்க போகும் முன்னர் அதனை ஒரு குழு திருடி வருகின்றது. இது தொடர்பாக கடற்படை மற்றும் கடற்றொழில் திணைக்களம் இணைந்து ஒரு திட்டம் அமைத்து, நடவடிக்கை எடுக்கப்படும் .

மேலும், கல்லடி பாலத்துக்கு அருகில் அமைந்துள்ள மீன்பிடித் திணைக்களத்தின் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை செயலிழந்துள்ளது. அதில் சமூகவிரோத செயல்கள் இடம்பெறுவதுடன், அடிக்கடி தீ மூட்டப்படுவதாக அறிந்துள்ளேன். அதற்கு 3 மாதத்துக்குள் தீர்வு காணப்படும்-என்றார்.

(அ)



# திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்தி விற்பனைக் கண்காட்சி

அக்கரைப்பற்று, ஏப். 12

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் விற்பனைக் கண்காட்சி நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச சமுர்த்தி அபிமாணீ விற்பனைக் கண்காட்சி திருக்கோவில் பிரதேச அலுவலக வளாகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கிலும், உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலும் , அவற்றை விளம்பரப்படுத்தும் நோக்கிலும் இந்த விற்பனைக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திரு.கந்தவனம் சதிசேகரன் மாவட்ட செயலக சமுர்த்திப் பிரிவு முகாமையாளர் நேசராசா ,சமுர்த்தி தலைமையக முகாமையாளர்ரி.பரமானந்தம், நிர்வாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா ,சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.அரசரெத்தினம், கருத்திட்ட முகாமையாளர் பி.கமலேஷ்வரன், தம்பிலுவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி .கே.நிஷாந்தினி ,மற்றும் விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர். ஜி.அமானுல்லா மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# அம்பாறையில் பொருட்களின் விலை குறைக்கப்படவில்லை

அக்கரைப்பற்று, ஏப். 12

அரசாங்கத்தால் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டபோதிலும், அம்பாறை மாவட்டத்தில் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு தொடக்கத்தில், பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

எரிபொருட்கள், எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதோடு, தற்பொழுது நாட்டில் ஓரளவுக்கு பொருளாதாரம் சீரடைந்து வரும் நிலையில் அம்பாறை மாவட்டத்தில் பொருட்களுக்கு இதுவரை விலைகள் குறைக்கப்படவில்லை எனவும், புத்தாண்டு காலப்பகுதியில் கூடுதலான விலைக்குப் பொருட்களை விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் தெரவிக் கின்றனர்.

போக்குவரத்துச் செலவுகள் குறைவடைந்துள்ள நிலையில் குறிப்பாக, உணவுப் பண்டங்களில் சீனி, மா மற்றும் ஏனைய சில பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஆனால், அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறு பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை.

வர்த்தக நிலையங்களில், பொருட்களின் கட்டுப்பாட்டு விலை தொடர்பான பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை எனவும் பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே, இது தொடர்பாக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# தாய்வானை சூழ நேற்றும் சீனாவின் 9 போர் கப்பல்கள், 26 விமானங்கள்!

தாய்பேய், ஏப். 12

**தாய்வானைச் சூழ்ந்த கடற்பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமையும் சீனாவின் போர்க்கப்பல்கள் மற்றும் விமானங்கள் காணப்பட்டதாக தாய்வானின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**



கடந்த சனிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரையான 3 நாள் இராணுவப் பயிற்சி யொன்றை சீனா நடத்தியது.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணி வரை தாய்வானைச் சூழ்ந்த கடற்பகுதிகளில் சீனாவின் 9 போர்க்கப்பல்கள், 26 விமானங்கள் அவதானிக்கப்பட்டதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சீனாவின் 12 போர்க்கப்பல்கள், 91 விமானங்கள் தாய்வானைச் சூழ்ந்த பகுதிகளில் காணப்பட்டதாகவும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில் 54 விமானங்கள் தாய்வானின் தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு வான் பாதுகாப்பு அடையாள வலயத்தை கடந்து சென்றதாகவும் தாய்வான் தெரிவித்துள்ளது. (அ)

# கியூப வங்கிகளில் அமெரிக்க டொலர் வைப்புச் செய்வதற்கான தடை நீக்கம்

ஹவானா, ஏப். 12

கியூபாவிலுள்ள வங்கிகளில் அமெரிக்க டொலர்கள் வைப்புச் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை கியூப அரசாங்கம் நீக்கியுள்ளது.

2021 ஜூனில் கியூப அரசாங்கம் இத்தடையை அமுல்படுத்த ஆரம்பித்தது. கியூபா மீதான அமெரிக்காவின் தடைகள் தொடர்வதால் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் காரணமாக இத்தடையை அமுல்படுத்துவதாக அப்போது கியூப அரசாங்கம் தெரிவித்திருந்தது.

தற்போது, சுமார் 2 வருடங்களாகும் நிலையில், இத்தடையை நீக்கப்பட்டுள்ளதாக கியூபாவின் மத்திய வங்கி கடந்த திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

கடந்த 30 வருடங்களில் இல்லாதளவு மோசமான பொருளாதார நெருக்கடிகளை கியூபா எதிர்கொண்டுள்ள நிலையில், டொலர் வைப்பீடு மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. கொரோனா பரவலின் பின்னர் சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்கும் இது அவசியம் என கியூபா கருதுகிறது.

1962 ஆம் ஆண்டு முதல் கியூபா மீது பல்வேறு தடைகளை அமெரிக்கா விதித்திருந்தது. இதனால் டொலர்களில் பரிவர்த்தனை செய்வதற்கு கியூபா சிரமப்பட்டது.




அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா பதவி வகித்த காலத்தில் கியூபா மீதான தடைகள் தளர்த்தப்பட்டன. ஆனால், டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக வகித்தபோது கியூபா மீதான தடைகள் அதிகரிக்கப்பட்டன. ட்ரம்பின் பதவிக் காலத்தின் இறுதி நாட்களில், பயங்கரவாதத்துக்கு அனுசரணை அளிக்கும் நாடுகளின் பட்டியலில் கியூபாவை அமெரிக்கா மீண்டும் இணைத்தது. (அ)

# தென்கொரியாவுடன் தகவல் தொடர்பை மீண்டும் துண்டித்துள்ளது வடகொரியா!

பியொங்யாங், ஏப். 12

தென்கொரியாவுடனான நேரடி தகவல் தொடர்பை வடகொரியா மீண்டும் துண்டித்துள்ளது.

1950 களில் நடந்த கொரிய போரின்போது வடகொரியாவும், தென்கொரியாவும் தனித்தனி நாடுகளாக பிரிந்தன. அப்போது முதல் இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான பகைமை நிலவி வருகின்றது.

எனினும் அவ்வப்போது இருநாடுகளும் அமைதி பேச்சு வார்த்தைக்கான முயற்சிகளை எடுப்பதும், பின்னர் அது கைவிடப்படுவதும் தொடர்கதையாக உள்ளது.

அந்த வகையில் கடந்த 2018ஆம் ஆண்டு இரு நாடுகளின் எல்லையில் உள்ள இராணுவம் விலக்கப்பட்ட பகுதியில் தகவல் தொடர்பு அலுவலகம் அமைக்கப்பட்டு, இரு நாடுகள் இடையே அரசாங்க நிலையிலான நேரடித் தொலைபேசி இணைப்பு தொடங்கப்பட்டது.

ஆனால் கடந்த 2020ஆம் ஆண்டு வடகொரியாவில் இருந்து தென்கொரியாவுக்கு தப்பிச் சென்றவர்கள் வடகொரியாவுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் அடங்கிய ஹீலியம் பலூன்களை வடகொரியாவுக்கு அனுப்பியமை சலசலப்பை ஏற்படுத்தியது.

இதனால் கோபமடைந்த வடகொரியா தகவல் தொடர்பு அலுவலகத்தை குண்டு வைத்து தகர்த்ததுடன், தென்கொரியாவுடனான நேரடித் தொலைபேசி இணைப்பை துண்டித்தது. எனினும் ஓர் ஆண்டுக்கு பின்னர் வடகொரியா-தென்கொரியா இடையே தகவல்தொடர்பு மீண்டும் தொடங்கியது.

இந்த நிலையில் அண்மைகாலமாக தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டு வருவது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகின்றது.

கூட்டுப்போர் பயிற்சியை கைவிடும்படி இருநாடுகளையும் வடகொரியா தொடர்ந்து எச்சரித்து வருகின்றது.

இந்த நிலையில் தென்கொரியாவுடனான நேரடி தகவல் தொடர்பை வடகொரியா மீண்டும் துண்டித்துள்ளது.

கடந்த 4 நாட்களாக தென்கொரியா அரசாங்கத்தின் அழைப்புகளை வடகொரியா தரப்பு ஏற்கவில்லை என தென்கொரியா தெரிவித்துள்ளது.

மேலும் அண்டை நாடான தென்கொரியா அமெரிக்காவின் கைப்பாவையாக செயல்படுவதாகவும், தங்களுக்கு துரோகம் செய்வதாகவும் வடகொரியா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் ஜோ பைடன்?

நியூயோர்க், ஏப். 12

2024 இல் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் தான் போட்டியிடக்கூடும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

மீண்டும் போட்டியிட எண்ணியுள்ளதாக தெரிவித்துள்ள பைடன், எனினும் அதனை தற்போது அறிவிப்பதற்கு தயாரில்லை எனவும் குறிப்பிட்டார்.

வெள்ளை மாளிகையின் உயிர்த்த ஞாயிறு சிறுவர் கொண்டாட்டத்துக்கு முன்னதாக என்.



பி.சி. செய்தியாளருக்கு பைடன் இதனை தெரிவித்துள்ளார். (அ)

# நைஜீரியாவில் கோர விபத்து!

## 15 பேர் உயிரிழப்பு

அபுஜா, ஏப். 12

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் எனுகு-போர்ட் ஹார்கோர்ட் நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் இரவு கோர விபத்து ஏற்பட்டுள்ளது.

பஸ் நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரெனச் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லொறி மீது மோதியதில் தீப்பிடித்தது.

இது குறித்து தகவலறிந்த பொலிஸார் மற்றும் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

இந்த விபத்தில் 15 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். மீட்புப் படையினர் அவர்களை மீட்டுச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கென்டக்கி பகுதியில் துப்பாக்கி பிரயோகம்

## நால்வர் உயிரிழப்பு

நியூயோர்க், ஏப். 12

அமெரிக்காவின் கென்டக்கி பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் ஊழியர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

அத்துடன் குறித்த நபர் தாக்குதலை இன்ஸ்டாகிராமில் நேரடி ஒளிபரப்பு செய்ததாக அந்த நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

எனினும் குறித்த காணொளி சில நிமிடங்களில் நீக்கப்பட்டதாக இன்ஸ்டாகிராம் நிறுவனம் அறிவித்துள்ளது.

பலியானவர்கள் 40 மற்றும் 64 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் ஒன்பது பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்களில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் காவல்துறையில் இணைந்த அதிகாரி ஒருவரும் அடங்குகிறார்.

அவரது தலையில் காயம் ஏற்பட்டுள்ளதுடன் மூளைப் பகுதியில் அறுவை சிகிச்சை இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

மூன்று நிமிடங்களில் காவல்துறையினர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது துப்பாக்கிச் சூட்டை நடத்திய தாக்குதல்தாரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

23 வயதான ஒருவரே துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (அ)

# பிலிப்பைன்ஸ்-அமெரிக்கா இடையே கூட்டு இராணுவப் பயிற்சி ஆரம்பம்!

மணிலா, ஏப். 12

பிலிப்பைன்ஸும் அமெரிக்காவும் பாரிய இராணுவப் பயிற்சியொன்றை நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துள்ளன.

இவ்வருடாந்த கூட்டுப்பயிற்சிக்கு பாலிகட்டான் என பெயரிடப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் மொழியில் இதற்கு தோளோடு தோள் என அர்த்தமாகும்.

சுமார் 18,000 துருப்புகள் இப்பயிற்சியில் பங்குபற்றுகின்றன. அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் இடையிலான மிகப்பெரிய கூட்டு இராணுவப் பயிற்சி இதுவாகும்.

முதல் தடவையாக தென்சீனக் கடலில், வெடிபொருட்கள் சகிதம் இப்பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. தென் சீனக் கடல் பகுதி முழுவதற்கும் சீனா உரிமை கோருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தாய்வானைச் சூழச் 3 நாள் இராணுவப் பயிற்சியொன்றை நேற்று முன் தினம் வரை சீனா நடத்திய நிலையில் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் கூட்டு இராணுவப் பயிற்சி ஆரம்பமாகியுள்ளது. (அ)




## டு பிளசிஸுக்கு ரூ. 54 இலட்சம் அபராதம்!

பெங்களூர், ஏப். 12

பெங்களூர் அணித் தலைவர் டு பிளசிஸுக்கு 12 இலட்சம் இந்திய ரூபாய் (இலங்கை மதிப்பில் சுமார் 54 இலட்சம் ரூபாய்) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் லக்னோ அணிக்கு எதிரான போட்டியில் பந்துவீசுவதற்கு கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டமைக்காகவே அவருக்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. (ஐ)




## அதிக சிக்ஸர் விளாசல் கோலி 5ஆவது இடத்தில்!

பெங்களூர், ஏப். 12

லக்னோவுக்கு எதிரான போட்டியில் விராட் கோலி அதிக சிக்ஸர்களை அடித்த ஐந்தாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

முன்னதாக முதல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக விராட் கோலியும் டு பிளெசிஸ்ம் இணைந்து அபாரமாக ஆடியதால் அந்த போட்டியில் பெங்களூர் அணி வெற்றி பெற்றது. 2ஆவது போட்டியில் விராட் கோலி சரியாக ஆடவில்லை. அந்த போட்டியில் பெங்ளூர் தோற்றது.

இந்நிலையில், லக்னோ அணிக்கு எதிரான போட்டியில் விராட் கோலி, டு பிளசிஸ், மக்ஸ்வெல் ஆகிய மூவருமே அதிரடியாக ஆடி அரைச்சதம் அடித்தனர். விராட் கோலி 44 பந்துகளில் 61 ஓட்டங்களையும் மக்ஸ்வெல் 29 பந்துகளில் 59 ஓட்டங்களையும், டு பிளசிஸ் 46 பந்துகளில் 79 ஓட்டங்களையும் குவிக்க, 20 ஓவரில் 212 ஓட்டங்களை குவித்தது பெங்களூர். இதனை துரத்திய லக்னோ அணி கடைசி பந்தில் வெற்றியை உறுதி செய்தது.

இந்த போட்டியில் 4 சிக்ஸர்களை விளாசிய விராட் கோலி ஐ. பி. எல்லில் அதிக சிக்ஸர்கள் விளாசிய வீரர்கள் பட்டியலில் பொலார்டை பின்னுக்குத்தள்ளி 5ஆம் இடத்தை பிடித்துள்ளார். விராட் கோலி இந்த 4 சிக்ஸர்களின் மூலம் ஐ. பி. எல்லில் மொத்தமாக 227 சிக்ஸர்களை விளாசியுள்ளார்.

ஐ. பி. எல்லில் அதிக சிக்ஸர்கள் அடித்த முதல், கிறிஸ் கெய்ல் - 357 சிக்ஸர்கள், டி வில்லியர்ஸ் - 251 சிக்ஸர்கள், ரோஹித் சர்மா - 241 சிக்ஸர்கள், டோனி - 232 சிக்ஸர்கள், விராட் கோலி - 227 சிக்ஸர்கள்

# பெங்களூரை துரத்தியடித்து லக்னோ அணி த்ரில் வெற்றி!

பெங்களூர், ஏப். 12

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி அதிரடியாக விளையாடி வெற்றிபெற்றது. கடைசிப் பந்தில் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் அந்த அணி வெற்றிபெற்றது.

213 ஓட்டங்கள் என்ற இமலாய இலக்கை துரத்திய லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸுக்கு கடந்த போட்டியைபோல் ஆரம்பம் சரியாக அமையவில்லை. இன்னிங்ஸின் 3ஆவது பந்திலேயே கைல் மேயர்ஸ் விக்கெட்டை வீழ்த்தி லக்னோ தரப்புக்கு அதிர்ச்சி கொடுத்தார் சிராஜ். ஆரம்பம் மட்டுமல்ல, முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் யாரும் அந்த அணிக்கு கைகொடுக்கவில்லை.

முதல் இரண்டு போட்டியில் சொதப்பிய, தீபக் ஹூடா இந்தப் போட்டியிலும் பெரிதாக சோபிக்க வில்லை. 9 ஓட்டங்களில் இரண்டாவது விக்கெட்டாக வீழ்ந்தார். குர்ணல் பாண்ட்யாவை மூன்றாவது விக்கெட்டாகவும் வழியனுப்பி வைத்தார் வெய்ன் பர்னெல். ஆனால், இவர்களுக்கு அடுத்ததாக இறங்கிய மோர்கஸ் ஸ்ரொய்னிஸ் மைதானத்தின் நாலாபுறமும் பந்துகளை சிதறடித்தார்.

இம்பேக்ட் வீரராக களமிறக்கப்பட்ட கரன் சர்மா ஓவரில் அடுத்தடுத்து சிக்ஸர் மற்றும் பௌண்ட்ரி விளாசி அரைச்சதம் கடந்தார். ஆனால், அதே கரன் சர்மாவின் அடுத்த ஓவரில் சிக்ஸ் அடிக்க முயன்று பிடியெடுப்பாகி வீழ்ந்தார். அவர் 30 பந்துகளில் 5 சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 65 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்ரொய்னிஸ் ஆட்டமிழந்த அடுத்த ஓவரில் அதுவரை பொறுமை காத்த கே. எல். ராகுல், சிராஜ் பந்தை சிக்ஸராக்க முயன்று விராட் கோலியிடம் பிடியெடுப்பு ஆனார். தொடக்க வீரராக இறங்கிய ராகுல் 20 பந்துகளில் 18 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.

இதன்பின்னரே மைதானம் சூடுபிடிக்கத் தொடங்கியது. அடுத்ததாக இறங்கிய நிக்கோலஸ் பூரண், ஸ்ரொய்னிஸ் விட்டுச் சென்ற அதிரடியை அவருக்கு ஒருபடி மேலாக தொடர்ந்தார் பூரண். 15 பந்துகளில் 50 ஓட்டங்களை கடந்த அவர், அரைச்சதம் கடந்த பின்னும் அதிரடியை கைவிடவில்லை.



62 ஓட்டங்கள் எடுத்திருந்த இவரையும் சிராஜ் வீழ்த்தினார். ஸ்ரொய்னிஸ் மற்றும் பூரணின் அதிரடி ஆட்டத்தால் லக்னோ அணி வெற்றிக்கு நெருக்கமானது. இறுதியில் 9 பந்துகளில் 7 ஓட்டங்கள் தேவை என்ற நிலை வந்த போது, பர்னெல் பந்தில் சிக்ஸர் அடித்த அயோஷ் பதோனி, எதிர்பாராதவிதமாக ஹிட் அவுட் ஆனார்.

கடைசி ஓவரில் 5 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவைப்பட ஹர்ஷல் பட்டேல் ஓவரின் முதல் பந்தை உனாட்கட் ஓர் ஓட்டம் எடுத்தார். அடுத்த பந்தில் மார்க் வூட் விக்கெட்டை இழந்தார். அடுத்த இரண்டு பந்துகளில் ரவி பிஷ்னோய் முறையே 2 மற்றும் ஓர் ஓட்டம் எடுக்க ஓட்டங்கள் சம நிலை ஆனது. 5ஆவது பந்தில் ஓர் ஓட்டம் எடுத்தால் லக்னோ அணி வெற்றிபெறும். உனாட்கட் பந்தை தூக்கி அடிக்க பிடியெடுப்பு ஆனது.

இதன்பின் அவேஷ் கான் களம்புகுந்தார். கடைசி பந்தை மன்கட் முறையில் ஆட்டமிழக்க செய்ய முயல கைகூடாமல் போனது. இறுதியாக கடைசி பந்தில் இலக்கை எட்டிய லக்னோ அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பெங்களூர் தரப்பில் சிராஜ் மற்றும் பர்னெல் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் லக்னோ நாணயச் சுழற்சியில் வென்று பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய விராட் கோலி, பப் டு பிளெசிஸ் இணை அணிக்கு சிறப்பான தொடக்கம் கொடுத்தது. 44 பந்துகளில் 61 ஓட்டங்களை விளாசி அணிக்கு பக்கபலமாக திகழ்ந்த கோலியை அமித் மிஸ்ரா ஆட்டமிழக்க செய்தார்.


அடுத்து வந்த மக்ஸ்வெல், டு பிளெசிஸ் கைகோத்தார். இருவரும் லக்னோவின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்து 27 பந்துகளில் 50 ஓட்டங்கள் இணைப் பாட்டம் அமைத்து அசத்தினர். 17 ஓவரில் டு பிளெசிஸ் அடித்த பந்தை குர்ணல் பாண்ட்யா தவற விட்டது பெங்களூர் ரசிகர்களுக்கு கூடுதல் உற்சாகத்தை கொடுத்தது.

தொடர்ந்து 44 பந்துகளில் 100 ஓட்டங்கள் என இருவரின் இணைப்பாட்டத்தையும் பிரிக்க முடியாமல் லக்னோ பந்துவீச்சாளர்கள் திணறினர். விளாசல் காட்டிய மக்ஸ்வெல்லை 19.5 ஓவரில் மார்க் வூட் ஆட்டமிழக்க செய்தார். 29 பந்துகளில் 59 ஓட்டங்களை சேர்த்த மக்ஸ்வெல், 6 சிக்ஸர்களை விளாசியிருந்தார்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் பெங்களூர் 2 விக்கெட்களை இழந்து 212 ஓட்டங்களை குவித்தது. பப் டு பிளெசிஸ் 79 ஓட்டங்களுடனும், தினேஷ் கார்த்திக் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். முதல் 3 துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டத்தால் பெங்ளூர் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

லக்னோ அணி தரப்பில் அமித் மிஸ்ரா, மார்க் வூட் ஆகியோர் தலா ஓர் விக்கெட்டை வீழ்த்தினர். (ஐ)

# பாகிஸ்தான் மகளிர் அணியின் தலைவியாக நிதா நியமனம்!




இஸ்லாமாபாத், ஏப். 12

பாகிஸ்தானின் மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவராக நிதா தார் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், மகளிர் அணியின் புதிய தலைமை பயிற்றுநராக நியூசிலாந்திஜன் மார்க் கோல்ஸ் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் மகளிர் அணியின் தலைவராக விளங்கிய பிஸ்மாஹ் மாரூப், தென்னாபிரிக்காவில் நடைபெற்ற மகளிர் இருபது - 20 உலகக்கிண்ண சுற்றுப்போட்டியின் பின்னர் ராஜினாமா செய்தார்.

இந்நிலையில் மகளிர் அணியின் புதிய தலைவராக நிதா தார் நியமிக்கப்பட்டுள்ளார்.

36 வயதான நிதா தார் 2010 ஆம் ஆண்டு முதல் 99 மகளிர் ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் 130 சர்வதேச இருபது20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

பாகிஸ்தான் மகளிர் அணி எதிர்வரும் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் தென்னாபிரிக்க அணியுடன் பாகிஸ்தானில் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. (ஐ)

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு

## உறுதியளித்தது உலக வங்கி

வாஷிங்டன், ஏப். 12

**இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.**

2023 வசந்த காலக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வாஷிங்டனுக்கு சென்றுள்ளார்.

இதன்போது உலக வங்கி குழுமம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவ பணிப்பாளர் அன்னா பிஜெர்டேவை சந்தித்து கலந்துரையாடினார்.

அவருடன் இலங்கையின் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார மீட்சிக்கான அதன் நன்மைகள் குறித்து கலந்துரையாடியதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்போது சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த உலக வங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என அவர் உறுதியளித்தார் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுடனும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கான நாட்டின் அர்ப்பணிப்பு குறித்து பேசியதாக ஷெஹான் சேமசிங்க கூறினார்.

# ஊழல் எதிர்ப்பு சட்டத்துக்கு முழு ஆதரவு வழங்கப்படும்

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப். 12

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

சட்டத்தை நிறைவேற்றுவதுடன் நின்றுவிடாமல் அதனை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தினார்.

அத்துடன், எதிர்க்கட்சியை பிளவுபடுத்தும் நோக்கிலேயே ஆளுங்கட்சியால், கட்சி தாவல் குறித்து கதை பரப்பட்டுவருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# மரண தண்டனை கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 12

மரண தண்டனை கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க சிறைச்சாலைகளுக்குள் 6 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

1934ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல்முறையாக நாட்டில் சிறைச்சாலை விதிமுறைகளை மனிதாபிமான முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

(அ)

# யாழில் முத்திரை பதிக்காது நிறுக்கும் கருவிகள் பாவித்த 15 வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்.மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள பல வியாபார மையங்களிலில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது

அவ்வேளை வியாபாரிகளினால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளைப் பரிசோதித்த போது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைகளத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 15 வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை, நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற் மேற்கொள்ளப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# மரபுரிமைச் சின்னத்தை மோதி தள்ளியது பௌஸர்!

## சாவகச்சேரியில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் ஏ-9 பிரதான வீதியில் நுணாவில் 190 ஆம் கட்டைப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி மீது எரிபொருள் பௌசர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 3 மணி அளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தினால் தொல்பொருள் திணைக்களத்தினால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த பாரம்பரிய சுமைதாங்கி முற்றாக அழிவடைந்தது.

இவ்விடத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி, இளைப்பாறும் மடம், குடிநீர்க்கிணறு என்பன காணப்படுகின்றன.

இந்த விபத்தினால் நொருங்கிய சுமைதாங்கியின் கற்களை நுணாவிலில் வசிக்கும் தனிநபர் ஒருவர் உழவு இயந்திரம் மூலம் அவசர அவசரமாக அள்ளிச் சென்றார்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் அப்பகுதியில்




இருந்து பொலிஸாரால் கொண்டு செல்லப்படுவதற்கு முன்னரேயே விபத்தினால் இடிந்த சுமைதாங்கியின் கற்களை அவர் பொலிஸார் முன்னிலையிலேயே அகற்றியமை அப்பகுதி மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் சாவகச்சேரி நகரசபைக்கு உடனடியாக அறிவித்தும் குறித்த இடத்துக்கு சம்பந்தப்பட்ட எவரும் வருகை தரவில்லை.

இந்நிலையில் அப்பகுதி இளைஞர்கள் முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் மூலமாக தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவித்ததை அடுத்து குறித்த திணைக்களத்தினர் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்தனர்.

(அ)

# கப்பலில் வெளிநாடு செல்ல முயன்ற வடக்கை சேர்ந்த 4 பேர் அதிரடி கைது!

கொழும்பு, ஏப். 12

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பலொன்றில் மறைந்திருந்து நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயன்ற நால்வரை துறைமுக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நால்வரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

25, 31 மற்றும் 32 வயதுடைய இருவர் என நால்வர் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் வேலணை, தொண்டமானாறு, புதுக்குடியிருப்பு மற்றும் அராலி வடக்கு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என தெரியவருகிறது.

கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பலில் ஏறிச் சந்தேகநபர்கள் குழு மறைந்திருந்துள்ளது. பின்னர் கப்பல் பயணிக்கத் தொடங்கிய நிலையில் கப்பலின் கப்டன், சுயஸ் கால்வாய் அருகே இந்த சந்தேக நபர்களை கவனித்துள்ளார்.

பின்னர் கப்பலின் கப்டன் கப்பல் நிறுவனத்துக்கு அறிவித்து சந்தேக நபர்களை இலங்கைக்கு நாடு கடத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (அ)

# கோழி இறைச்சியின் விலை மேலும் உயரும்?

கொழும்பு, ஏப். 12

சந்தையில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி ஆயிரத்து 350 ரூபாவை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

பண்டிகைக் காலம் என்பதால் சந்தையில் கோழி இறைச்சிக்கான தட்டுப்பாடு காரணமாக விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)



# போலி கடவுச்சீட்டுடன் வந்தவரை நாடு கடத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 12

பஹாமாஸ் நாட்டுக்குச் சொந்தமான போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்ற நைஜீரியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நைஜீரியாவில் இருந்து லைபீரியாவுக்கும், பின்னர் மொராக்கோவுக்கும் அவர் பயணித்துள்ளார். பின்னர் கட்டார் எயார் வேஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கியூ.ஆர். 654 என்ற விமானம் மூலம் இலங்கை வந்தடைந்த அவர் நேற்று முன் தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டார்.

கடவுச்சீட்டை சரி பார்த்த விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் அவரை மீண்டும் நாடு கடத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

## மத பிரிவு...

டிக்கை எடுப்பதாக வும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் செயலக அதிகாரிகள் அளித்த உறுதி மொழிக்கு அமைய நேற்று மாலை இந்தப் போராட்டம் நிறைவுக்கு வந்தது.

அண்மையில், அச்சுவேலியில் மத ஆராதனை ஒன்றின்போது ஆலயத்துக்கு (நெசவு சாலைக்கு) கல் வீசினார் என்று கூறி பெண் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து இரு பெண்களை போதகரின் மகனும் வேறு சிலரும் கடுமையாக தாக்கினர்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து போதகர், அவரின் மகன் உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், நேற்று செவ்வாய்க் கிழமை காலை சிவசேனை அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து அந்த போதகரை அவர்கள் மத ஸ்தலமாக மாற்றியுள்ள நெசவு சாலையிலிருந்து வெளியேறுமாறு கூறி போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று மாலை போராட்டம் நடந்த இடத்துக்கு ஆளுநர் பணிமனையின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சென்றனர். அத்துடன், அந்த மதப் பிரிவு வழிபாடுகளை நடத்திய இடத்துக்கும் சென்ற அவர்கள் நிலைமைகளை அவதானித்தனர்.

இதன் பின்னர், போராட்டக்காரர்களை சந்தித்த அதிகாரிகள் அரச கட்டடத்தை விடுவிக்கவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தனர். இதையடுத்து, சிவசேனை அமைப்பினரும் மக்களும் ஒன்றிணைந்து நடத்திய போராட்டம் நிறைவுக்கு வந்தது.

இதன்போது, மதப் பிரிவினரின் தாக்குதல் சம்பவத்தின் போது பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை என்றும் சிவசேனை அமைப்பினர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பயங்கரவாத...

பட்டது. ஆனால், கடுமையான எதிர்ப்புகளை அடுத்து அந்த யோசனை பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே இரண்டாவது வார பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகும்போது புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் முதலாம் வாசிப்புக்கென பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது என்று நீதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

மேலும், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாக்கக்கூடிய நாட்டை கட்டியெழுப்புவதற்காகவே பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டுவர நடவடிக்கை எடுத்தோம். என்றாலும் ஒருசிலர் இதற்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர் என்று நேற்று மன்னாரில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் பேசியபோது அவர் தெரிவித்தார்.

அத்துடன் கட்சி, மத பிரிவினை இருக்கும்வரை அபிவிருத்தியடைந்த நாட்டை நிர்மாணிப்பது இலகுவான விடயமல்ல என்றும் கூறியிருந்தார்.

இதனிடையே, புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் சில விடயங்களுடன் உடன்பட மாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெளிநாடு...

நுழைந்து வெளிநாடு செல்ல முயன்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் யாழ்ப்பாணத்தின் வேலணை, தொண்டைமானாறு, அராலியை சேர்ந்தவர்கள் என்று அறிய வருகிறது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 10இல்)

## அரசாங்கத்......

எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ள ஒரு சில ஏற்பாடுகளுக்கு இணங்கப் போவதில்லை. அவை நிச்சயம் திருத்தப்பட வேண்டும் என்பதை அமைச்சரவை கூட்டத்தின் போது எடுத்துரைத்துள்ளேன்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்து தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் புதிய வரைவை தயார் செய்தோம்.

நாங்கள் தயார் செய்த சட்டமூல வரைவு தற்போது வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவில்லை. இருப்பினும், நாங்கள் அறிமுகப்படுத்திய ஏற்பாடுகள் புதிய வரைவில் உள்வாங்கப்பட்டுள்ளன.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைவின் ஒருசில ஏற்பாடுகளுக்கு இணங்கப் போவதில்லை. பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேக நபரை தடுத்து வைக்கும் உத்தரவை பிறப்பிக்கும் அதிகாரம் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. தடுப்பு காவல் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்க வேண்டும் அல்லது நீதிமன்றிடம் இருக்க வேண்டும்.

பயங்கரவாதம் என்ற சொற்பதத்துக்கு நீண்ட வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது. சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்பட பல விடயங்கள் பயங்கரவாத செயல்பாடாக அடையாளப்படுத்தப்படலாம். ஆகவே, பயங்கரவாதம் என்ற சொற்பதத்துக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பின்னர் சகல தரப்புடன் விரிவான பேச்சு மேற்கொள்ளப்படும். சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் திருத்தம் செய்யப்பட்டு நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உருவாக்கப்படும் - என்றார். (ஐ)

## மரணப்...

உலகின் மிக நவீன மற்றும் மேம்பட்ட கல்விமுறைகளுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இந்நாட்டிலுள்ள 10 ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகளை ஸ்மார்ட் பாடசாலைகளாக மாற்றுவதே எமது ஒரேநோக்கமாகும். இதற்காக மேற்கொள்ள முடியுமான சகலநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

எமது நாட்டில் பல பாகுபாடுகள் காணப்படுகின்றன. மதங்கள், இனங்கள், பணக்காரர்கள், ஏழைகள், இயலுமையுள்ளவர்கள், இயலுமையற்றவர்கள் என பல்வேறு வகைகளில் மக்கள் பிரிந்துள்ளனர் என்றும் இதன்போது அவர் கூறினார். (ஐ)

## ஒரு இலட்சம்...

தகவல்கள் வெளி யாகியுள்ளன.

நாட்டிலிலுள்ள குரங்குகளை வெளிநாட்டுக்கு வழங்குவது தொடர்பான சட்ட நிலைமைகளை ஆராய்வதற்காக, அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமைய குழு ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

குரங்கு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் இதுவரை மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ள நிலையிலேயே, இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# ‘13’ அரசின் நிலைப்பாடு குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கம்!




கொழும்பு, ஏப். 12

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் விளக்கமளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை நிறுவுதல் உட்பட நல்லிணக்கத்துக்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

இதன் போது உரையாற்றிய அமைச்சர் அலி சப்ரி,

கடந்த ஆண்டு டிசம்பரிலும், இவ்வாண்டு ஜனவரியிலும் ஜனாதிபதியால் சர்வகட்சி மாநாட்டை கூட்டுவதற்கும் , ஜனாதிபதி தலைமையில் நல்லிணக்கத்துக்கான அமைச்சரவை உபகுழுவை நியமிப்பது உள்ளிட்ட நல்லிணக்கத்துக்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் விளக்கமளித்தார்.

மேலும், 13ஆவது அரசமைப்பு திருத்தம் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் அமைச்சர் விளக்கினார்.

இந்த சந்திப்பில், கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திரிகளுடன் நேற்று முன்தினம் நடந்த இந்த சந்திப்பில் வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி , இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## மனநலம்...

ளது.இதில், தெல்லிப்பழை மனநல மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தை சேர்ந்த நாகராஜா (வயது-48) என்பவரே கொலையானார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

தாயை இழந்த, தந்தையை பிரிந்து வாழ்கின்ற 20 வயது இளைஞர் ஒருவர் மனநல நோய்ப் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தார். அவரை உறவினர்களே பராமரித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இளைஞர் மனநல சிகிச்சைக்காக கடந்த செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். ஆனால், நேற்று முன்தினம் அவர் அங்கிருந்து தப்பி வீட்டுக்கு வந்துள்ளார்.

இந்நிலையில், இளைஞரின் உறவினர்கள் அவரை மீண்டும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முயன்றுள்ளனர். இதற்காக, அவரை மருத்துவமனையில் பராமரித்தவரை இதற்காக அழைத்து வந்துள்ளனர்.

இந்நிலையில், மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞர் கொடிகாமம் ரயில் நிலைய வீதியில் அமர்ந்திருந்துள்ளார். அவரை பராமரிப்பாளர் அழைத்துள்ளார். இதையடுத்து இருவரும் வீட்டின் உள்ளே சென்றுள்ளனர்.

அந்தச் சமயம், இளைஞரின் உறவினர் வீதியோரமாக முச்சக்கர வண்டியில் காத்திருந்துள்ளார்.

பின்னர், வீட்டுக்குள் இருந்து இளைஞர் மட்டும் வெளியே வந்து மீண்டும் ரயில் நிலைய வீதியில் அமர்ந்துள்ளார். அவருடன் சென்ற நோயாளர் பராமரிப்பாளரை காணாததால் இளைஞரின் உறவினர் அவரின் கைபேசி அழைப்புகளை ஏற்படுத்தியுள்ளார். அவரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்காத நிலையில் வீதியில் அமர்ந்திருந்த இளைஞரிடம் அவர் குறித்துக் கேட்டுள்ளார்.

அதற்கு இளைஞர், “அவரை அலவாங்கால் குத்தி கொலை செய்துவிட்டேன்”, என்று கூறியுள்ளார்.

இதையடுத்து, இளைஞரின் உறவினர் வீட்டுக்கு சென்று பார்த்தபோது அவர் கத்தியால் வெட்டப்பட்டும் அலவாங்கால் குத்தப்பட்டும் உயிரிழந்து கிடந்தார். அவரின் முகமும் சிதைந்து போயிருந்தது.

கொடிகாமம் பொலிஸாருக்கு அளித்த தகவலின் அடிப்படையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், இளைஞரையும் கைது செய்துள்ளனர். (ஐ)

## புதிய பயங்கர...

னால், இலங்கைக்கு 50 கோடி டொலர் மதிப்பிலான வர்த்தக சலுகை கிடைக்காமல் போகக்கூடும். ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்புகளை அடையாளப்படுத்தும் போது நீதித்துறை மற்றும் பொது மக்களின் தகவல்களின் அடிப்படையிலான செயல்முறையால் முன்னெடுக்கப்படுகிறது.

எனினும், இலங்கையில், இந்த செயல்முறை மிகவும் குறைவான வெளிப்படைத் தன்மையை கொண்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## உள்ளூராட்சி...

பட்டதாக அந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த மார்ச் 9 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர், எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், தேர்தலை நடத்தத் தேவையான நிதி கிடைக்காமை, தேர்தல் ஆணைக்குழுவின் நிர்வாகத்துக்கு அப்பால்பட்ட காரணங்களால் இரண்டாவது தடவையாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தேர்தலுக்கு தேவையான நிதி கிடைப்பதற்கான உறுதியான திகதி அல்லது தேர்தல் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றின் தீர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் உள்ளூராட்சி தேர்தலுக்கான புதிய திகதி தீர்மானிக்கப்படும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்படுகிறது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அரசியல், பொருளாதார திருத்தங்களே நாட்டு மக்களின் பலத்த எதிர்பார்ப்பு!

*பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத்*

கொழும்பு, ஏப்ரல் 12

அரசியல் சீர்திருத்தம் மற்றும் பொருளாதார சீர்திருத்தத்தையே நாட்டு மக்கள் எதிர்பார்ப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் கூட்டணியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இந்த சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புத்தாண்டுக்குப் பிறகு அதாவது இந்த மாதத்தின் இறுதி இரு வாரங்களிலும் நாட்டின் அரசியலில் ஏற்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் தெளிவுப்படுத்த வேண்டியுள்ளது.

நாட்டில் தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கமானது தற்காலிக அரசாங்கமாகும்.

மக்களால் 69 இலட்சம் வாக்குகளை பெற்று தெரிவான ஜனாதிபதி, மக்கள் புரட்சியால் ஆட்சி பீடத்திலிருந்து வெளியேறினார்.

நாட்டில் மக்கள் எழுச்சி ஒன்று ஏற்பட்டது.

எனவே பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களால் ஆளுங்கட்சிக்கு ஏற்ற ஒருவர், மாற்றுக் கட்சியை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

எனவே தற்போதைய ஜனாதிபதி பதவிக்கும் இடைக்கால ஜனாதிபதி என்றே கூறப்படுகின்றது.

எனவே இது இடைக்காலமாகக் காணப்படுகின்றது.

இந்த இடைக்கால ஆட்சியில் நாட்டின் பொருளாதார பிரச்னைக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பற்கு ஒருவராலும் முடியாமல் போயுள்ளது.

எனினும் தற்காலிக தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மட்டுமே தற்போதைய நிலையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு இந்த அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்று நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்யலாம் என்பதில் மட்டுமே அரசாங்கம் கரிசணைக்கொண்டுள்ளது.

எமது நாட்டுக்கு புதிய பொருளாதார வேலைத் திட்டம், புதிய அரசியல் கொள்கை மறுசீரமைப்பு அவசியமாகின்றது.

சுதந்திர மக்கள் கூட்டணி என்ற முறையில் நாம் ஆறு மாதங்களுக்கு முன்னர் இரண்டு வேலைத்திட்டங்களை முன்வைத்தோம்.

நாட்டில் பொருளாதார மறுசீரமைப்பு கொள்கை என்பது அவசியமாகும்.

இந்நாட்டுக்கு அரசியல் மறுசீரமைப்பு கொள்கை என்பது அவசியமாகும்.

எனவே பொருளாதார மறுசீரமைப்பு, அரசியல் மறுசரீமைப்பு தொடர்பிலான கலந்துரையாடலுக்கு வராமல் சிறந்த அரசியல் மாற்றம் நாட்டில் ஏற்படப் போவதில்லை' என்றார். (அ-கே)

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தால் தகவலறியும் உரிமைக்கு அச்சுறுத்தல் இல்லை

*கூறுகின்றார் நீதி அமைச்சர்*

கொழும்பு, ஏப். 12



தகவல் அறியும் உரிமைக்கு பாதிப்பு ஏற்படும் வகை யிலான சரத்துகள், பயங்க ரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் இல்லை என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொலைபேசி உரையாடல்கள் உள்ளிட்ட தரவுகளை கண்காணிக்கும் வகை யில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத் தில் தனியாக எந்த சரத்தும் உருவாக்கப் படவில்லை.

தற்போது குற்றச் செயற்பாடுகள் மற்றும் கொலை சம்பவங்கள் உள்ளிட்ட விடயங்களின் போது நீதிமன்ற அனுமதியுடன் தொலைபேசி தரவுகளை பெற்றுக் கொள் ளும் அதிகாரம் உள்ளது.

அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங் கள் உலக நாடுகள் பலவற்றிலும் சட்ட மாக உள்ளது-என்றார். (அ)

# கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் எந்த சட்டமூலத்துக்கும் ஆதரவில்லை!

*பொதுஜன பெரமுன*

கொழும்பு, ஏப்ரல் 12

**மக்களின் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை நசுக்கும் அல்லது ஒடுக்கும் எந்த சட்ட மூலத்துக்கும் கட்சி என்ற முறையில் நாம் ஆதரவளிக்கப்போவதில்லை என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

'பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் ஜனாநாயத்துக்கு விரோதமானவை என்பதன் காரணமாகவே உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் புதிய உத்தேச சட்டமூலம் இன்னும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுமாயின் அதில் உள்ள ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

மக்களின் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை நசுக்கும் அல்லது ஒடுக்கும் எந்த சட்டமூலத்துக்கும் கட்சி என்ற முறையில் நாம் ஆதரவளிக்கப்போவதில்லை.

அதேபோன்று மக்களது ஜனநாயக உரிமைகளை பறிக்கும் எந்த சட்டமூலத்துக்கும் நாம் ஆதரவளிக்கப்போவதில்லை.

இந்த இரு விடயங்களையும் அடிப்படையாக வைத்தே நாம் உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் கதைக்க வேண்டும்.

ஏற்கெனவே நாம் குறிப்பிட்டதைப் போன்று உத்தேச புதிய பயங்கரவாத சட்டமூலத்தில் பயங்கரவாதம் செயற்பாடு என்ற சொல்லை வரையறை செய்யும்போது மட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியது அவசியம் என்ற கருத்தில் நாம் உறுதியாக உள்ளோம்.

ஏனெனில் இந்த பதத்தினூடாக சகல நடவடிக்கைகளும் பயங்கவாரதத்தை நடவடிக்கை என்று அர்த்தப்படுமாயின் அது ஜனநாயக பண்புகளைக் கொண்ட நாட்டுக்கு பொருத்தமானதாக அமையாது.

அதேபோன்று இந்த சட்டமூலத்தை கொண்டுவரும் நீதியமைச்சர்கூட ஒரு நம்பிக்கையற்ற நிலைமை காணப்படுவதை ஊடகங்களினூடாக அறிந்துகொண்டோம்.

எனவே கட்சி என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு விடயத்தை வலியுறுத்துகின்றோம்.

அதாவது, இந்த சட்டமூலத்தை கொண்டுவரும் நீதி அமைச்சருக்குக் கூட ஒரு நம்பிக்கையற்ற நிலைமை காணப்படுமாயின் இந்த சட்டமூலத்தை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டியது அவசியம்.

சட்டமூலம் தொடர்பில் அதனுடன் தொடர்புடைய நிபுணர் குழுவை நியமித்து ஜனநாயகத்தை கேள்விக்கு உட்படுத்தாத வகையில் சட்டமூலத்தை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

ஏனெனில் அரசாங்கம் என்ற முறையில் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது அந்த சட்டமூலத்தை கொண்டுவரும் நீதி அமைச்சர் சட்டமூலம் தொடர்பில் நம்பிக்கை உடையவராக இருக்க வேண்டியது அவசியமாகும்.

கொண்டுவரப்படும் சட்டமூலத்தில் நம்பிக்கை இல்லையெனில் அந்த சட்டமூலத்தை கொண்டுவாராமல் விடுவதே சிறந்தது' - என்றார். (அ-கே)

# "தொழில்துறையை கட்டி எழுப்புவதற்கு பலமான பாதுகாப்பு கொள்கை அவசியம்"

கொழும்பு, ஏப்ரல் 12

தொழிற்றுறையை கட்டி எழுப்புவதற்கு பலமான பாதுகாப்பு கொள்கையொன்றை தொடர்ச்சியாக பின்பற்ற வேண்டியது அவசியம் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்துள்ளார்.

தொழிற்றுறை ஆலோசனை குழுக்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்களை கையளிக்கும் நிகழ்வு தொழில் அமைச்சில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வெவ்வேறு தொழிற்றுறை பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் 20 ஆலோசனைக் குழுக்கள் தொழில் அமைச்சின் கீழ் செயற்படுகின்றன.

11 குழுக்களுக்கான தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான கடிதங்கள் இதன்போது கையளிக்கப்பட்டன.

இதன்போது கருத்துரைத்த கைத்தொழில் அமைச்சர் ரமேஸ் பத்திரண,

நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய இடமானது தொழிற்றுறைக்கே வழங்கப்படுகின்றது. தொழிற்றுறையை பாது காப்பதற்கும் அதனை வளர்ப் பதற்கும் தொழிற்றுறை சார்ந்த பாதுகாப்பு கொள்கைகள் நடைமுறையில் இருக்க வேண்டியது அவசியம்.

பாதுகாப்பு கொள்கைகள் நடைமுறையில் இல்லாத சந்தர்ப்பங்களில் தேசிய கைத்தொழிற்றுறையை முன்னெடுத்து செல்வது சிக்கலுக்குரிய விடயமாகமாறும்.

நாட்டினுள் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பதிலாக மாற்றீடுகள் சந்தைக்குள் வருவதை தடுக்க வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறு இல்லையாயின் தேசிய தொழிற்றுறையானது வீழ்ச்சியடைவதை தடுக்க முடியாது.

இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு மிகவும் பலம்வாய்ந்த பாதுகாப்பு கொள்கை என்பது அவசியமாகும்.

இதனை மக்கள் மத்தியில் ஒரு கொள்கையாக பரப்ப வேண்டியது அவசியமாகும். இந்த கொள்கையை பரப்பும் பொறுப்பானது தொழிற்சாலை துறையினருக்கும் வியாபாரிகளுக்கும் இருக்கின்றது.

அதேபோன்று எமது நாட்டில் தொழிற்றுறை அபிவிருத்திக்கான அரச முதலீடுகள் என்பது குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றது.

எதிர்வரும் வருடங்களில் தொழிற்றுறைக்கு அபிவிருத்திக்கான அரச முதலீடுகளை அதிகரித்து தொழிற்றுறை, தொழிற்சாலை துறைகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.-என்றார். (அ-கே)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.